குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 18] விகாரி ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—59 [இதழ் 10

ஆசிரியர்:- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர்:- வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

"ஞானசம்பந்தம்"

உட்பொருள்

		பக்கம்
1.	வாழ்க அருள்நந்தி மாமுனிவர்	... 593
2.	சிவ ஞான போதம்	... 596
3.	போற்றிப் பஃறொடை வெண்பா	... 601
4.	ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள்	604
5.	ஆசியுரை	... 612
6.	வாழ்த்து	... 617, 626
7.	~~தமிழ்விடு தூது~~	... 618
8.	ஆற்றுப்படை	... 623
9.	வாழ்த்துக்கள்	... 627
10.	வாழ்த்துப்பா	... 637
11.	அன்பு மலர்	... 639
12.	வரவேற்புரை	... 644
13.	தினத்தாள்களில்	... 648
14.	திருவேற்காட்டுத் தல வரலாறு	... 651
15.	பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்	... 653
16.	தமிழின்பின் சென்ற திருவிளையாடல்	... 657
17.	செய்திகள்	... 661
18.	எதிர்காலம்	... 667
19.	மகாகயிலாய யாத்திரை	... 671

அட்டைப்பட விளக்கம்

திருக்கேதார தரிசனத்தின்போது திருக்கேதார மலையின் அடிவாரத்தில் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்திதம்பிரான் சுவாமிகள் அவர்களும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள்

உ

குருபாதம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகளது

61-ஆம் ஆண்டின் தொடக்கம் ஆகிய

ஆவணி மூலத் திருநாட் சிறப்புமலர்

11—9—1959

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவ்வரி
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

வாய்ந்தசெங்கேல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோ ருறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்துசொன்ன வருந்தமிழ்கள் பத்தும்இசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே.

திருச்சிற்றம்பலம்

உ
குருபாதம்
வாழ்க உலகெலாம்!

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18 } விகாரி - ஆவணி 10—9—59 { இதழ் 10

உ
திருச்சிற்றம்பலம்

போன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலி!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

வாழ்க அருள்நந்தி மாமுனிவர்

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு ஆவணிமூலத் திருநாள்முதலாக அறுபத்தோன்றும் ஆண்டு தொடங்குகிறது தருமையாதீனத்து 23ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சிக்காலத்தில், அவர்களது அருளுபதேசம்பெற்றுர்கள். 24ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களிடம் ஞானதீக்ஷை பெற்றுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் தலைவர் ஆனுர்கள். 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கண்மணிகளுட் சிறந்த நன்மணியாகி விளங்கும் அன்பருளின் வடிவாக விளங்குபவர்கள்.

முதலிற் குறித்த ஞான பிதா தக்ஷிண யாத்திரை செய்த காலத்தில், உடன் சென்று திருக்கோயில்தோறும் திருமுறைப் பாடல்களைப் பண்ணிசைவழாது இன்னிசை பாடிச் சிவபிரான் முதலிய கடவுளர் திருச்செவிகளைக் குளிர்வித்த சிவபுண்ணிய மூர்த்திகள், உலகன்னையான பெரியநாயகியின் அருளால் அரிய நாயகிபுரத்தில் அவதரித்தவர்கள் ஆதலின், செய்தற்கு அரிய செயல்களைச் செய்துவரும் பெரியநாயகராகப் பிறங்குகின்றார்கள்.

'ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாம்கல்வி கேள்வியல்லல்
ஒய்வார் சிவாநந்த வாரியுள் ளேஒன் றிரண்டும்அறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே'

என்னும் தருமையாதீனத்து அடியவர் அருளொழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள்.

எங்கும் 'சிவ சிவ' விளக்கம், எங்கும் திருமுறை முழக்கம், எங்கும் திருமுறைத் திருவிழா, எங்கும் திருமுறைக் கல்லெழுத்துப் பிரதிஷ்டை, எங்கும் அன்னதானம், எங்கும் சொன்னதானம், எங்கும் வித்தியாதானம், எங்கும் புராணபடனம், எங்கும் ஒலிபரப்பி வழியாக இன்னருள் ஒலிமுழக்கம், எங்கும் போட்டிப் பரிசு வழக்கம், எங்கும் தரிசிக்கும் பழக்கம், எங்கும் அருள் நூல் விளக்கம், எங்கும் தெய்விகத் துளக்கம், எங்கும் இதயத்து இளக்கம், பக்திப் பெருக்கம். தீவினைச் சுருக்கம், திருவருள் உருக்கம், ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்கம், ஆணவ மலச்சுருக்கம். இவற்றிற்குக் காரணம் என்ன? அளவிலாத அறக்கட்டளைகளின் பெரும் பயன். அதனால் இவ்வுலகம் நன்னிலையில் விளங்குகின்றது.

நல்லறம் எனினும், நல்லோர் நற்சிந்தையால் நடைபெறுதலின், நல்லன எல்லாம் நல்குகின்றன நம்பெருமானாரின் நற்பணிகள். நல்லோர் யார்? 'அகன் அமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று ஐம்புலனும் அடக்கி ஞானம் புகலுடையோர்'. அவர்கள் 'தம் உள்ளப் புண்டரிகத்துள்ளுறையும் புராணர்'க்கு வேறு கோயில் வேண்டா அன்றே! 'மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துரந்து செய்யராகும்' கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார்; நம் மாமுனிவர். 'பத்திப்பேர் வித்து இட்டே பரந்த ஐம்புலன்கள் வாய்ப்பாலே போகாமே' காத்துவரும்

மூர்த்தி. மேய் 'அருள் பேணிப் போய்யிலாத மனத்தார்;' 'போய்யிருள் கடிந்த மேய்ச்சுடர்;' 'சேந்தமிழ் கோண்டு இசைபாடும் ஞானம் வல்லார்;' 'அவன் பேருமையல்லால் சேவித்துளைகளால் யாவும் கேளார்; நாவினுல் நவின்று ஏத்தல் ஓவார்;' 'அஞ்சு புலன் வேன்று அறுவகைப் போருள் தேரிந்து ஏழிசைக் கிளவியால் வேஞ்சினம் ஒழித்தவர்கள்; அஞ்சுகளிறும் அடக்கிச் சுரும்பார் மலர் இண்டை கட்டி வழிபாடு சேய்யும் தோண்டர்க்கு அளிக்கும் திருவருட் கோண்டல். போய்யன்பிலா அப் பேருமுனிவர்க்குத் தோண்டராம் புண்ணியம் பேறல் அரிது, அழுமலர்க்கண்ணிணை அடியவர்க்குஅல்லால் அவர்சீர் அறிவரிது.

சீலத்திரு காசிவாசி அருள்நந்தி மாமுனிவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க. பலகோடி நூருயிரத்தாண்டு வாழ்க, பல்லூழி வாழ்க, வாழ்க ஸ்ரீகாசிமடம், வாழ்க ஸ்ரீ கேதாரகட்டம், வாழ்க திருப்பனந்தாள் ஞானபுத்திர மடம், வாழ்க தருமபுர ஆதீனத்து ஞானபிதா மடாலயம். குருஞானசம்பந்தர் அருள் ஞான வழிக்குத் தோண்டர் கூட்டம் பேருக விழையும் அருள்நந்திமாமுனிவர் வாழ்க.

'வான்முகில் வழாது பேய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு சேய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவ நீதி விளங்குக உலக மேல்லாம்.'

'வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பேருமான் புகழ்கேட்ட வார்சேவிகள்
வாழி அவனை வணங்கும் முடிச்சேன்னி
வாழிஅவன் சீர்பாடும் வாய்.'

என்று ஸ்ரீ காசிமடத்தின் தனி முதல்வரும் தருமைக் குருவின் ஞானப் புதல்வரும் ஆகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய வாழ்த்து இங்குப் போற்றி வாழ்த்துவதற்குத் தக்க போருத்தம் மிக்க வாழ்த்து.

வாழ்க குமரகுருபர முனிவர். வாழ்க வழித்தோன்றல்கள். வாழ்க சாமிநாத மாமுனிவர். வாழ்க அவர் வளர்த்த அறம். வாழ்க உலகேலாம். இவ்வாறு வாழ்த்தும் பேறு எய்திய நேஞ்சமே! சிவபுண்ணியங்களுள் என்ன புண்ணியம் சேய்தனை? வாழ்க.

வாழ்க அருள்நந்தி மாமுனிவர்.

சிவ ஞான போதம்

கட்டுரை 8

(மலர் 18, இதழ் 9, பக்கம் 537 இன் தொடர்பு)

இரண்டாவது சூத்திரம்

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

அவையே தானேயாய் இருவினையின், போக்குவரவு புரிய ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்று ஏ

புனருற்பவம்வருமாறு உணர்த்துதலைக் குறித்தது இச் சூத்திரம்.

முதற் சூத்திரத்திற்கும் இரண்டாவது சூத்திரத்திற்கும் ஐவகையியையும் உள்ளவாறு உணர்வார், இதன் பொருளைத் தெளிந்துகொள்வது எளிது. இயைபு, தொடர்பு, ஒற்றுமை, சம்பந்தம் என்பன ஒரு பொருள.

ஐவகையியைபு

1. நூலியைபு, 2. அதிகாரவியைபு, 3. இயலியைபு, 4. அடியியைபு, 5. அதிகரணவியைபு.

1. நூலியைபு

சிவஞானபோதம் என்னும் நூலியைபு ஞானபாதப் பொருளியல்பாராய்தல்.

2. அதிகாரவியைபு

இந்நூல் இரண்டு அதிகாரம் உள்ளது. முன்னது பொது. பின்னது உண்மை. முன்னுறு சூத்திரங்கட்கும் பேதத்தின்

நின்ற நிலைபற்றிப் பொதுவியல்பு (தடத்த லட்சணம்) கூறுதல் அதிகாரவியைபு. (இது பொது.) பின்னுறு சூத்திரங் கட்கும் முத்திநிலைபற்றிச் சிறப்பியல்பு (சொரூப லட்சணம்) கூறுதல் அதிகார இயைபு. (இஃது உண்மை.)

3. இயலியைபு

முதல் அதிகாரம் பிரமாணம் இலக்கணம் என்னும் ஈரியல் உடையது. இரண்டாவது அதிகாரம் சாதனம் பயன் என்னும் ஈரியல் உடையது. இந் நான்கியலுள் முன்னிரண் டும் பொதுவியல்புணர்த்துவன. பின்னிரண்டும் உண்மை (சிறப்பியல்பு) உணர்த்துவன. பொதுவியல்பு இடையே நீங்குவது. சிறப்பியல்பு எக்காலத்தும் ஒரு தன்மையதா யுள்ளது. இடையே நீங்குவ தில்லை. தடத்தம் சொரூபம் என்ற வடசொற்பரியாயம் இவை.

பல்பொருட்குப் பொதுவான இலக்கணம் பொதுவியல்பு. ஒரு பொருட்கே உரிய இலக்கணம் சிறப்பியல்பு. இவ் விரண்டும் அளவை நூலாற் கூறப்படுவன. இவை வேறு. முற்கூறிய இரண்டும் வேறு. சொல்லொருமையால் மயங்க லாகாது.

நான்கியலுள்ளும் ஒவ்வோரியலிலும் மும்மூன்றுபாதம் (அடி) உள்ளன. ஒவ்வொரு பாதமும் ஒவ்வொரு சூத்திர மாகும். இங்குப் பாதம் என்றது இயலின் அடியை. சூத்திரத் தின் அடியை அல்ல. தனித்தனி மும்மூன்று சூத்திரங்கட்கும் உள்ளது இயலியைபும், அவ்வாறு சூத்திரங்கட்கும் உள்ளது அதிகாரவியைபும், நூல் முழுமைக்கும் உள்ளது நூலியைபும் ஆகும் என்னும் இம் மூன்றன் வேறுபாடு அறியற்பாலது.

4. அடி (பாத) இயைபு

ஒரு சூத்திரத்திற்கும் அதனை அடுத்து நின்ற சூத்திரத் திற்கும் உள்ள இயைபு. இங்கு முதல் இரண்டு சூத்திரத்தின் இயைபு அடியியைபு.

5. அதிகாரணவியைபு

ஓர் அதிகரணத்திற்கும் மற்ரோர் அதிகரணத்திற்கும் உள்ள இயைபு அதிகரணஇயைபு. இங்கே முதற் சூத்திரத்தின் மூன்ருவது அதிகரணத்திற்கும் இரண்டாவது சூத்திரத்தின் முதலதிகரணத்திற்கும் உள்ள இயைபே அதிகரண வியைபு.

1. உத்தேசம் கூறியபின்னர் இலக்கணம் கூறும் முறைமைபற்றிய இயைபால் அதிகரணஇயைபு பெறப் பட்டது.

2. துணேக்காரணம் முதலியவற்றின் உண்மையைப் பிரமாணம் காட்டி நிறுவாத வழி, இறைவன் நிமித்தகாரண ஞதல் சாலாது. சாலாமையின், அவை இருக்கின்றன என்பதைப் பிரமாணம் காட்டிக் கூறிஞல் 'சாலாது' என்னும் ஆசங்கை நீங்கும். அதைப் பிரமாணம் காட்டி நீக்குதலால் ஆசங்கைபற்றிய இயைபு ஆகும். அவ் வியைபால் இயலியைபு பெறப்பட்டது.

3. அந்தத்தைச் செய்யுங் கடவுளே அந்தம் என்ருர். இது காரணப்பெயர். சருவமும் அந்தத்தை உறச்செய்யாத ஏனேயோரினும் பிறித்துநின்றது இது. ஒடுங்கி (அந்தம்) என்றதும் இப்பொருளதே. ஒடுங்கியினின்றும் மீள உளதாமாற்றை வகுத்துக் கூறல்வேண்டும். அதைக் கூருத வழி ஒடுங்கியினின்றும் எவ்வாறு உளதாம் என்று அவாய்நிற்கும். அவ்வவாய்நிலேபற்றிய இயைபால் அடியியைபு பெறப் பட்டது. இவ்வாறு முதற் சூத்திரத்திற்கும் இச் சூத்திரத்திற்கும் உள்ள இயைபுகளே உணர்ந்தால் இனிது பொருள் விளங்கும்.

உத்தேசம், இலட்சணம், பரீட்சை என்னும் மூவழியாற் பதார்த்தஞானம் உணர்த்தப்படும். பெயர் மாத்திரத்தாற் பொருள் புலப்படச் சொல்லுதல் உத்தேசம் என்பர் நியாய நூலார். சிவப்பிரகாசத்திலே ' பலகலேயாகமவேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல் ' என்றருளிஞர்

உமாபதிதேவ நாயனுர். அதில், ‘பதி பசு பாசம்’ என்ற முப்பொருளையும் பெயர் மாத்திரத்தாற் புலப்படச் சொல்லி யருளினுர். அவ்வுத்தேசம், தெரித்தலை விசேடித்து நின்றது. ‘பசு பாசத்தோடு பதியாய் பெற்றி’ என்று வாகீச முனிவர் ஞானுமிர்தத்தில் அருளினுர். அதில், அப் பதி பசு பாசம் ஆகிய முப் பொருளும், ஆய்தற்குச் செயப்படு பொருளாய் விசேடிக்கப்பட்டு நின்றன. இங்கனம் யாதானும் ஒன்ருல் விசேடிக்கப்பட்டாதல் விசேடித்தாதல் நிற்றல் உத்தேசத்தின் நிலை. வாளா பெயராய் நிற்றல் யாண்டும் இல்லை.

முதற் சூத்திரத்தில் ‘அந்தம்’ என்றது உத்தேசம். பின்னர்க் கூறப்படுவதாம் இலக்கணத்தை அவாவிநிற்பதாய் முன்னர் எடுத்துக் கொள்வதே உத்தேசம் எனப்படும். அவ்வாறு அதை அவாவிநிற்பதே உத்தேசம் செய்யும் செயல். அச் செயலை ‘அந்தம்’ என்னும் உத்தேசம் செய்கின்றது. முதற் சூத்திரத்தில் ‘அந்தம்’ என்று உத்தேச மாக எடுத்துக்கொண்ட இறைவனுக்கு இலக்கணம் கூறு வது இச் சூத்திரம். இதனை உத்தேசம் அன்று என்பார்க்கு, அது செய்யுஞ் செயலை இது செய்வதால், இதனை உத்தேச மாக வைத்து இயைபுகொள்ளல் பொருந்தும்.

முதல் அதிகரணத்தின் விளக்கம்

(அ) அவையே தானேயாய். (அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய்).

(ஆ) 1. ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும் என்றது.

2. ‘அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில் ஏகம் என்று சுட்டுவது உண்மை யின், அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு.’

(இ) அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.

(ஈ) ‘ உலகெலாம் ஆகி வேருய் உடனுமாய் ஒளி யாய் ஓங்கி’

(உ) 1. அவையேயாதல் (‘ கட்டும் உறுப்பும்........ ஆங்கு ’)

2. தானேயாதல் (‘ ஒன்றேன்ற தோன்றே காண்........இருக்கு ’)

3. அவையே தானேயாதல் (‘ பண்ணையும்........ ஆங்கு ’)

4. அம் மூன்றும் ஒருங்கு கூறற்கு எடுத்துக் காட்டியது (‘ அரக்கோடு........இன்று ’)

(தொடரும்)

சிவஞான சித்தியார்

ஒழுக்கமன் பருளா சார
முபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
யழுக்கிலாத் துறவ டக்கம்
அறிவோடுஅடர்ச் சித்த லாதி
யிழுக்கிலா வறங்க ளாஞு
லிரங்குவான் பணிய றங்கள்.

— அருணந்திசிவம்.

போற்றிப் பஃறொடை வெண்பா

திருமகளும் நாமகளும் செம்பொன்மலை மாதும்
தருமளவில் லாநலங்கள் சார்ந்து—பெருமகிழ்வுற்
றோங்கும் திருப்பனந்தாள் உற்றுயிர்கட் கின்பருளித்
தாங்கும் அருணசடே சன்போற்றி—பாங்குமருள்
நண்புங்கொள் ளும்பெரிய நாயகிதாள் போற்றியுயர்
பண்புடையோர் மெய்ச்சைவப் பாங்கனைத்தும்—மண்புகழக்
கொண்டு திருக்காசிக் கோயிலெனத் தோன்றியெழில்
வண்டு விசா லாட்சி வரம்போற்றிக்—கண்டு
விசுவலிங்கம் போற்றி அவன் மெய்யருள்பெற் றோங்கி
அசுவமுதல் யாவும் அணிந்து—பசுவரு
துற்ற அருளரசுக் கொத்த நலம் பலவும்
பெற்றதிருக் காசிமடப் பேர்போற்றி—கற்றவரும்
அன்பரும்மெய்த் தொண்டர்களும் ஆராத காதலுடன்
முன்பரவ வாழும் முதல்போற்றி—பொன்பரவும்
சீவைகுண் டத்துவடல் சேர்கயிலாசத் துதித்த
கோவைக் குமர குருபரனார்—தேவைமுனம்
போற்றிஎனச் சொல்லியடி போற்றி அவர்பனுவல்
போற்றி அவர்வழியைப் போற்றியுய்வேம்—போற்றியெழிற்
சொக்கநா தன்தாள் துணைபோற்றி காசியுறை
தக்கஅரு ணாசலவேள் தாள்போற்றி—மிக்கபுகழ்
அம்பலவா ணன்பொன் னடிபோற்றி நற்பனசை
நம்பன் சடையப்பன் ஞானமுனி—செம்பதுமப்
பூப்போற்றி எங்கும் புகழ்தில்லை நாயகன்றாட்
பூப்போற்றி முன்வினையைப் போக்கியெனைக்—காப்பாற்றும்
கோமான் குமர குருபரனார் தாள்போற்றி
நாமாண் சிதம்பர நாதனார்—பூமாண்ட
தாள்போற்றி கங்கைச் சடையப்பன் தாமரைப்பூந்
தாள்போற்றி பத்தாய்மேற் சார்மூன்றாய்—வேள்போற்றும்
முன்னவன்பேர் கொண்ட முனிவர் அடிபோற்றி
பன்னொன்றாய்ப் பன்னான்காய்ப் பாராண்ட—மன்னர்
இராமலிங்கர் செந்தா ளிணைபோற்றி பத்தோ
டொராவீரண்டே ழெட்டா யாண் டுற்ற—பராவும்பேர்ச்
சொக்கலிங்க மாமுனிவர் தூயதிருத் தாள்போற்றி

தோக்கபதி ணேந்தாய்த் துலங்கியோளி—மிக்கவராம்
போன்னம் பலவர் புனேகழல்கள் போற்றிஅவர்
பின்னம் பன்போலப் பிறங்கியசீர்—மன்னுங்கோ
சோமசுந்த ரப்பேயர்கோள் தூயோன் அடிபோற்றி
சாமிநாதச் சதுரர் தாள்போற்றி—மாமதுரைச்
சோக்கேசன் இன்னருளால் தோன்றும் முனிபோற்றி
மிக்கோர்க்கு மிக்கோன் விறல்போற்றி—தக்கோன்
அருணந்தி மாமுனிவன் அம்புயத்தாள் போற்றி
இருணந்தி யாமுய்ய ஈந்த—போருணந்தி
எப்பிறப்பும் காக்கும் இனிததனுல் எம்போல
இப்பிறப்பிற் பல்லோர் இலங்கஅருள்—ஒப்பிறப்பில்
சீகாசி வாசி சிவமுனிவன் தாள்போற்றி
ஆகாச வாசிகளும் ஆய்வரிய—யோகாதி
வாய்ந்த புனிதன் மலர்ச்சே வடிபோற்றி
ஆய்ந்த திருமுறையே அர்ச்சிக்கப்—பாய்ந்த
அருளாளன் போற்றி அனேவர்க்கும் நல்கும்
போருளாளன் போற்றி புலமைத்—தேருளாளன்
சேவடிகள் போற்றி திருமுறையை வீதியேலாம்
தூவடிகள் போலச் சுவைத்தேவரும்—நாவடியும்
காதடியும் உள்ளக் கருத்தடியும் போய்க்குளிர
ஓதடியார் பல்லோர்க் குதவுதிருச்—சேதடிகள்
போற்றி சிவாலயத்திற் புண்ணியநூற் பண்ணிசையை
ஏற்றிச் சிவன்சேவியில் இன்புறுத்து—நாற்றிசையும்
வாழ்த்த நிதிவைத்த வள்ளல் அடிபோற்றி
சூழ்த்த மதுகரமும் சோல்லும்அதை—வீழ்த்த
வினேயால் சிவனடியை மேவி விதியால்
நினேயா வணங்கும் நேறியும்—அனேயாகிப்
பல்லுயிர்க்கும் நல்லனவே பண்புமிகச் சேய்தருளும்
நல்லுணர்வே யான நலம்போற்றி—ஒல்லும்
வகையேல்லாம் ஓவாதே வாய்மைக் கோடைக்கே
தோகையேல்லாம் வைத்துச் சுகஞ்சேய்—தகைமைக்
குணம்போற்றி தில்லேதிருக் குற்றுலம் ஆரூர்
கணம்போற்றும் கேதாரம் காசி—மணம்போற்றும்
காஞ்சி குடந்தை கவின்மதுரை நேல்வேலி
வாஞ்சியம்அண் ணுமலேசீ வைகுண்டம்— போஞ்சிறுமை
ஆம்பேருமை என்னும் அரிய பேரியதலம்

தாம்பெரிதும் கூடுஞ் சனங்களெலாம்—ஓம்பொருளை
ஓதி வினையொழிய ஓங்கி இனிதுறையத்
தீதிலாக் கல்விற் றிருமுறைகள்—கோதில்
திருக்குறட்பா ஆசான் சிவபோக சாரம்
உருக்கும் தமிழ்ப்பாடல் உள்நோய்—கருக்குமென
நோக்கிப் பொறித்துநல நோக்கம் வளர்வழியே
ஆக்கும் அருணந்தி அண்ணலடிப்—பூக்கிளரும்
பாக்கியமே போற்றி பரமன் திருப்புகழே
நாக்கிலுற வைத்த நலம்போற்றி—சேக்கிழார்
சந்தானச் செல்வர் சமய குரவரது
சிந்தாத செந்நெறியே சென்றுழுகும்—நந்தா
மணிவிளக்கம் போற்றி மதிநுட்பம் நூலோ
டணிவிளக்கம் போற்றி நலம் ஆவ—எணிவிளக்கம்
செய்யும் திறம்போற்றி செல்வக் கொடைமழையே
பெய்யும் அருணந்திப் பேரருளாம்—சையம்உறை
நல்லமுகில் போற்றி நல்லறஞ்செய் கட்டளையில்
வல்லபிரான் போற்றி வடமலையிற்—செல்லரிய
கேதாரத்திற்குக் கிளராண்டிற் பன்முறைசென்
றுதார மூர்த்தி யருள்பெருகிக்—காதாரத்
தேவாரம் பாடித் திருப்புகழும் ஓதிவரும்
நாவாரச்செய்யும் நயம்போற்றி—பாவாரப்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லூழி
சொல்லாண்ட சைவச் சுருதியுறும்—நல்லாண்டான்
இன்னருளால் வாழ்க இருந்தூழி வாழியவே
என்னருமைக் கோவே இனிது.

வாழ்க. வாழ்க. வாழ்க.

அடியன்

முத்து. சு. மாணிக்கவாசகன்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்திதம்பிரான் சுவாமிகள்

புண்ணியப்பயன் :-

இமயமுதற் குமரிவரை எல்லோராலும் வாழ்த்தப்பெறும் தவத்திற் சிறந்த முனிவரர் திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள். இருபதாம் நூற்ருண்டின் குமரகுருபர முனிவராய் இவர்கள் விளங்கி வருவதை உலகம் நன்கறியும். அறக்கட்டளைகள் பலவற்றையும் இந்தியநாடு எங்கணும் நிறுவிய இப் பேரருளாளர் தமிழகத்துக்குக் கிடைத்தது, தமிழ் மக்களின் தவப்பயனுகும். இன்று எல்லோருடைய உள்ளமும் நாவும் ஒரு சேர இவர்களை வாழ்த்துகின்றன. தம்புகழ்வேண்டாத தவஞான சீலராகிய இவர்களின் திரு உருவப் படத்தைப் பூசையில் வைத்து வழிபடுவோர் பலர் சிவ சிவ முனிவராய் எப்போழுதுமே அத்திருநாமத்தைச் சோல்லிக்கோண்டும் அன்பர்கள் பலரையும் சோல்லச் செய்தும் வருகின்றவர்கள் இவர்கள். இவர்களது வாழ்க்கையை நினைப்பதே ஒரு சிவ புண்ணியம். அமைதியான தோற்றம், ஆழ்ந்த அறிவின் விளக்கம், இடைவிடாத குருபக்தி இனிய சோற்கள் இவைகள் இவர்களைத் தரிசிப்பார்க்கு என்றும் நினைவில் இருப்பவை. சதா சிவசிந்தனை மறவாமல் இருந்துவரச் சிந்திக்கவும் என்ற குரு ஆணைப்படி ஐந்தெழுத்தோதும் பயனை அனுபவத்தில் உணர்ந்து எல்லோருக்கும் உணர்த்தும் இவர்களது அருள் மோழி கேட்போர் சிறந்த சிவ புண்ணியம் உடையவர்கள். புண்ணியப் பயனுய்த் திருஉருக்கோண்ட இவர்களுடைய நினைவு தமிழ் மக்களுக்கு என்றும் இருக்கத்தக்கது.

குமரகுருபரர் :-

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்கள் குமரகுருபரரின் பிற்ரோன்றலாக எழுந்தருளி யிருப்பவர்கள். பாண்டிய வளநாட்டில் திருநேல்வேலியை அடுத்த ஸ்ரீ வைகுண்டம் என்னும் திருநகரில் குமரகுருபர சுவாமிகள் தோன்றினுர். தந்தை சண்முக சிகாமணிக் கவிராயர் தாய் மீனுட்சி அம்மை. பிள்ளைப்பேறு இல்லாமல் வருந்திய இவர்கள் திருச்சேந்திற்குமரனை வேண்டி

அடிகளைப் பெற்றார்கள். பிறந்த ஐந்து ஆண்டுகள் வரை வாய்பேசாது இருந்த குழந்தையின் நிலையை நோக்கிய பெற்றோர் திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்று முருகன் சந்நிதியில் குழந்தையைக் கிடத்திப் பாடு கிடந்தார்கள். ஒரு நாள் இரவில் முருகன் குழந்தையின் கனவில் தோன்றிக் குமரகுருபரா எழுந்திரு என்று உலகியல் வசமாய்க் கிடந்து உறங்கிய குழந்தையைத் தன் வசமாக்கித் தட்டி எழுப்பினர். எழுந்தது குழந்தை. குவிந்து இருந்த வாய் பூவெனவிரிந்தது. குழந்தை சைவசித்தாந்த சாரமாய்க் கந்த புராணத்தின் பிழிவாய்க் கந்தர் கலிவெண்பா என்ற நூலால் முருகனைப் போற்றிசைத்தது. ஞானசாரியரை வேண்டி நின்றது. வாக்குத் தடைப்படுமிடமே ஞானசாரியர் இருக்குமிடம் என்று முருகன் திருவாய் மலர்ந்தார்.

தல யாத்திரை :-

அன்று முதல் தெய்வத் திருவருட் கடலில் திளைத்து மூழ்கத் தொடங்கினர் குமரகுருபரர். தலங்கள்தோறும் சென்று தமிழ்ப் பிரபந்தங்கள் பாடினர். மதுரைத்திருமலைநாயக்கர்முன்னிலையில் அங்கயற்கண்ணிமேல் பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் ஆயிற்று. மீனாட்சி அம்மையால் முத்துமாலை சூட்டப்பெற்றார். அங்கிருந்து தல யாத்திரையாகத் தருமை ஆதீனத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஞானசாரியர் :-

அப்பொழுது குருமுதல்வராக இங்கு எழுந்தருளியிருந்தவர்கள் 4 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர். குமரகுருபரர் தருமையின் எல்லையை அடைந்தவுடனே சிவபோதம் கழன்று சிவபோதம் எய்தினர். மகா சந்நிதானத்தைத் தரிசிக்கவேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் தோன்றியது. இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல இவர் உள்ளம் மகாசந்நிதானத்தின் அருளாற்றலில் பதிய முற்பட்டது. மகாசந்நிதானம் அவர்கள் குமரகுருபரரை அழைத்து அருகில் இருத்தி ''ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள'' என்னும் பெரிய புராணத் திருப்பாடலுக்கு அனுபவப்பொருள் கேட்டார்கள். குமரகுருபரர் மகாசந்நிதானம் அவர்களின் ஞானனுபவ நிலையை

உணர்ந்து அப்பாடற்பொருள் அனுபவியாதவராய்த் திகைத்தார். வாக்குத் தடைப்பட்டது. அடியற்ற மரம்போல் அவர்களின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். என்னையும் அடியவனாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வேண்டி நின்றார். மகா சந்நிதானத்தில் காசி யாத்திரை சென்றுவரவேண்டுமென்று உத்தரவாயிற்று. பரிபாகம் அடைந்த குமரகுருபரர் விரைந்து சிவபோகம் துய்க்கத் துடித்தார். சிதம்பர தரிசனம் செய்தேனும் திரும்பி வருக என்று ஆணை பிறந்தது. அவ்வாறே குமர குருபரர் சிதம்பர யாத்திரை சென்றுவந்து ஆதீன அடியவராகிப் பண்டாரமும்மணிக்கோவை என்னும் பாமாலை புனைந்து மகா சந்நிதானத்தின் திருவடிகளில் சூட்டி விடைபெற்றார். காசி சென்றார்.

காசியில் திருமடம் :-

காசியில் விசுவநாதர் ஆலயம் முகமதியர் ஆட்சியில் சீர் குலைந்திருந்தது. பாதுஷாவைக் காண விரும்பினர். கலைமகளை வேண்டி இந்திமொழி பேசத் தெரிந்துகொண்டு சிங்கத்தின் மேலமர்ந்து பாதுஷாவிடம் பல அற்புதங்கள் நிகழ்த்திமுகமதியர் வழிபடும் இடமாயிருந்த பள்ளிவாசலைச் சிவநெறி வளர்க்கும் திருமடம் கட்டுவதற்கு இடமாகப் பெற்றார். இவ்வாறு குமரி எல்லையிலே தோன்றிய குமரகுருபரர் கங்கைவரை சென்று தமிழும், சமயமும் பரப்பிக் காசியில் வாசம்செய்து காசிவாசி சுவாமிகள் என்ற பெயரோடு விளங்கினார்கள். அவர்களின் காலம் 17-ம் நூற்றாண்டாகும். அவர்களின் இருபதாவது பிற்றோன்றலாக இன்று எழுந்தருளியிருக்கும் குமரகுருபரர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

பிறப்பும் வளர்ப்பும் :-

தென்பாண்டி வளநாட்டில் குமரகுருபரருக்கு மதுரைத் திருமலை நாயக்கரால் அளிக்கப்பெற்ற முற்றூட்டாகிய அரிய நாயகிபுரம் என்பது இவர்களை ஈன்றெடுத்துக்கொடுத்த பெருமைக் குரிய ஊராகும். குமரகுருபரர் தோன்றிய நாடு மட்டுமல்ல; அவருக்கு அளிக்கப்பெற்ற ஊரின்கண்ணேயே பிறந்தவர்கள் என்பதை நினைக்கும்போது குமரகுருபரரின் அவதாரமென்று இவர்களைச் சொல்லத் தோன்றுகின்றது. தொண்டைமண்டல

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில்

கோலுக்காட்சியில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகட்குப் பொன்னுடை போர்த்து திருமுறை நூல்கள் வழங்கி ஆசி அருளல்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்களைக் கொலுவிருத்தி
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் பூசனை புரிதல்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்களை
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும், இளவரசு சுவாமிகளும்
கோலு மண்டபத்திற்கு வரவேற்றல்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்களும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும்
திருக்கூட்டத்து அடியவர்களும்

தருமையாதீனம், சண்முக விலாசம் திறப்பு விழாவில்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள்
சண்முக விலாசத்தைத் திறக்கும் காட்சி



ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள்
குழந்தைகட்கு மலரும், கனி முதலியபொருள்களும் வழங்குதல்

வேளாண்குடியில் தோன்றியவர்கள் இவர்கள். இவர்களின் தாய் தந்தையர்கள் செந்திலாண்டவனிடத்தில் நீங்காத அன்பு பூண்டவர்கள். செந்திற்குமரன் திருவருளால் ஆவணி மூல நன்னாளில் சுவாமிகள் அவதரித்தார்கள். முருகன் திருவருளை எண்ணி இன்புற்றனர் பெரியோர். பிள்ளைப் பருவத்தில் இவர்கள் திருநெல்வேலி இந்து கல்லூரியில் கல்வி கற்றார்கள். சமயப்பற்றும் முருகனிடத்தில் முறுகிய அன்பும் கொண்டு விளங்கினார்கள். இளமையிலேயே அறிவு ஆற்றல்களால் சிறந்து விளங்கிய இவர்கள் கல்விநலம் சிறக்கப்பெற்றார்கள்.

சில உலகியல் அலுவல்கள் ஏற்றார்கள். உண்பதற்கும் உயிர் வாழ்வதற்கும் மட்டும்தானே இவ்வலுவல்கள் எல்லாம் பயன்படும். உலகில் பிறந்ததன் பயனை அடைய இவைகள் தடையாகுமே என்று எண்ணினார்கள். ஞான சீலராய் சமயம் வளர்க்கும் தெய்வத் தவமுனிவராய் வருங்காலத்தில் விளங்க இருந்த இவர்களைப் பெருமான் இங்கெல்லாம் நிறுத்திவைக்க வில்லை. அலுவல்களையெல்லாம் விட்டு மனத்திற்கு மகிழ்ச்சி யும் அமைதியும் தரும் மருந்து தேடிப் புறப்பட்டார்கள் உண்மையான துறவு நிலை அப்பொழுது இவர்களுக்கு வந்து விட்டது. உற்றார் உறவினர் மேல்வைத்த பற்றுக் கழன்றது. 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப் பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்னும் தெய்வப் புலவர் திருவாக்கு நினைவிற்கு வந்தது. உடலுக்குரியவர்கள் நம் உறவினர். உயிருக்குரியவ ரல்லர் என்ற எண்ணம் எழுந்தது. 'அப்பன் நீ அம்மை நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ' என்ற அப்பரடிகளின் அருள் மொழி உண்மையான உறவினர்களை உள்ளத்திலிருந்து உணர்த் தியது. என் கடன் தெய்வப் பணிசெய்து கிடப்பதே என்று எழுந்தார்கள். குமரகுருபரரைத் தெய்வத்தமிழ்த் தொண்டராக் கிய திருத்தருமபுர ஆதீனம் அவர்கள் நினைவிற்கு வந்தது. தருமபுரம் வந்தார்கள். அப்பொழுது தருமை ஆதீனத்தில் 23 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளரசு செலுத்திய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களிடம் ஞானதீட்சை பெற்று ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களில் ஒருவராய்க் குருமகா சந்நிதானத்தின் பெருங்கருணைக்கும் பெருமதிப்பிற்கும் உரிய வராய் விளங்கினார்கள்.

தருமையில் :-

சைவசித்தாந்த சாத்திரங்கள் திருமுறைகள் மற்றும் பல சமயநூல்கள் இவற்றிலே இங்கு இவர்கட்கு நல்ல ஆய்வும் தோய்வும் ஏற்பட்டன. ஞானுவரணம் முத்தி நிச்சயம் முதலிய பண்டார சாத்திர நூல்களைப் பழைய ஏட்டுச் சுவடிகளிலிருந்து சரிபார்த்துப் பெயர்த்து எழுதும் வாய்ப்பு ஏற்பட்டது. தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்கள் பலவற்றை மேற்பார்க்கும் பணியிலும் சிறந்து விளங்கினுர்கள். சமய மாநாடுகள் பலவற்றில் தலைமை அமர்ந்தும் அருளுரை புரிந்தும் சமயவிரிவுரைப் பணிகளில் தலைநின்ருர்கள். தருமை ஆதீனத்தில் நடைபெற்ற மிகச் சிறந்த மாநாடாகிய மெய் கண்டான் சித்தாந்த மாநாட்டிலும் 24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பத்தாண்டு ஆட்சி விழாவிலும் இவர்கள் கலந்து கொண்டு வரவேற்புரை, வாழ்த்துரை, நன்றியுரை கூறியவை இன்னும் அன்பர்கள் நெஞ்சைவிட்டு நீங்காதனவாகும். காலம் உண்டாகவே என்னும் திருவாசகப் பாடலை இவர்கள் தேன் ஒழுகப் பாடியது இன்னும் தருமைத் திருமடம் எங்கும் எதிரொலிசெய்துகொண்டிருக்கிறது 'சென்றகாலத்தின்' என்னும் பெரியபுராணப் பாடலும் வேறுபல பாடல்களும் பண்ணேன்ற இவர்கள் பாடுவதைக் கேட்டுப் பரவசமுற்ருேர் பல்லாயிரவர்.

திருப்பனந்தாள்காசிமடத்தில் அப்போது எழுந்தருளி இருந்த வர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், கம்பராமாயணம், திருமுறைகள், சாத்திர நூல்கள் முதலியவற்றில் நுண்மாண் நுழைபுலம் உள்ளவர்கள். அவர்கள் சுவாமிகளின் சிறந்த தகுதியைக் கண்டு தமக்குப் பிற்ருேன்றலாக இவர்களையே நியமித்தல்வேண்டும் என்று திருவுளம் பற்றினுர்கள். அவ்வண்ணமே 1944ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2மே நாள் திருப்பனந்தாள் காசிமடத்தின் தலைவராக எழுந்தருளுவித்தார்கள். சுவாமிகளவர்கள் குருமகா சந்நிதானத்தின் ஆசீர்வாதம் பெற்றுக் குருவருளும் திருவருளும் நிறைந்தவர்களாய் அருளரசு புரியத் தொடங்கினுர்கள். தம் முடைய குருமுதல்வர்களாக விளங்கிவரும் மகாசந்நிதானங்களை

அடிக்கடிவந்து தரிசித்தும் அவர்களை வரவேற்றுப் பட்டினப் பிரவேசங்கள் கோலுக்காட்சிகள் நிகழ்த்தியும் குருதரிசனம் குருபக்தி இவைகளை இடையருது மேற்கொண்டு ஒழுகி வருகிருர்கள். இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் திருக்கேதார யாத்திரைக்கு அழைத்துச் சென்று உடனிருந்து வழிபாடு செய்வித்தருளிய திறம் இவர்களது குருபக்திக்கு ஒரு எடுத்துக்காட்டு. இவர்கள் ஆட்சி ஏற்றது முதலாகச் செய்துவரும் அறப்பணிகள் மிக்கன.

திருமுறை வளர்ச்சி :-

பன்னிருதிருமுறைகளைக் குறைந்த விலைக்கு அச்சிடுவித்து எல்லோருக்கும் வழங்கி வருகின்ருர்கள். பண்ணிசைவாணர் களைக்கொண்டு சிறந்த சிவதலங்களில் தேவார பாராயணம் செய்விக்கின்ருர்கள். ஓதுவார் மூர்த்திகள் பலரைப் பலதலங் களில் நியமித்துவருகின்ருர்கள். நிலையாக இவ்வறங்கள் நடைபெற சேமநிதி வைப்பு வழங்கியருளியிருக்கின்ருர்கள். கல்வி நிலையங்களில் பயிலும் இளம் மாணவர்கள் திருமுறை களைப் படிக்கப் பரிசுத் திட்டங்கள் அமைத்து வருகின்ருர்கள். சிவதலங்களில் தேவாரப் பதிகக் கல்வெட்டுகள் அமைத்து வருவது உலகம் அறிந்தது.

சைவ சித்தாந்த வளர்ச்சி :-

சைவ சித்தாந்தம் நாடெங்கணும் பரவ நல்ல பல திட்டங் களை உருவாக்கியுள்ளார்கள். பல்கலைக் கழகங்களில் சொற்பொழி வாற்றப் பொருளுதவியும், பரிசுகளும், நூல்கள் வெளியிட நிலையான நிதிகளும் தந்து வருகின்ருர்கள். சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் வட இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் இன்று பயிலப் பெறுகின்றன. இந்தி ஆங்கில மொழிபெயர்ப்புகளில் பல நூல் வெளியிடப்பெறுகின்றன.

அன்ன தானம் :-

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராகக் கருதப் பெறுவது மரபு. இன்று இவர்கள் அன்னதானத்திற்கு என்று பல இடங்களில் பல அறங்கள் நிறுவி அன்னதானங்கள்

அளித்துவர நிலையான நிதிகள் அமைத்தருளியுள்ளார்கள். திருவிழாக் காலங்களில் சிவதலங்கள் பலவற்றில் இவ் வன்ன தானம் வழங்கப்பெறுகிறது. நாடோறும் பல ஏழை மக்கள் உணவு பெறுமாறு பல இடங்களில் அறக்கட்டளைகள் அமைத்துள்ளார்கள். காசி போன்ற இடங்களில் நாடோறும் பல ஏழை மக்களுக்கு அன்னதானம் அளிக்கப்படுகிறது.

கல்விக் கொடை :-

கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், தோடக்கப் பள்ளிகள் முதலிய பல கல்விநிலயங்களுக்குப் பெரிய அளவில் நன்கொடைகள் அளித்துள்ளார்கள். சேந்தமிழ்க் கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகள், தோடக்கப் பள்ளிகள் பலவற்றை நடத்தி வருகின்றார்கள். அறிவுக் கண்களை மாணவர்களுக்குத் திறந்துவைக்கும் ஞான விளக்கு என இளைஞர் உலகம் இவர்களைப் போற்றி வருகிறது.

பிற அறங்கள் :-

குமரகுருபரர் திருவவதாரம் செய்த ஸ்ரீவைகுண்டமேங்கும் மக்கள், குமரகுருபரரின் திருநாமம் சொல்லவும் சிந்திக்கவும் செய்தவர்கள். ‘குமரகுருபரன்’ என்ற பெயரில் மாத இதழ், அச்சகம், உயர்பள்ளிகள், நூலகங்கள் மற்றும் பல மன்றங்கள் இவைகளை அங்குத் தோற்றுவித்து என்றும் இவை நின்று நிலவ நிலையான நிதிகள் அமைத்துள்ளார்கள். மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் பொன்தாமரைமலர்ந்துள்ளது. மதுரைவெள்ளியம்பலத் தலவிருட்சம் வெள்ளிக் கவசமணிந்து நிலைத்த விளக்கம் பெறுகிறது. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் முதலியவற்றில் திருமுறை முதலிய தேய்வத் தமிழ் நூல்களை மாணவர்கள் விரும்பிக் கற்றுவருகின்றனர். பல கல்வி நிலையங்கள் இவர்கள் அருட்கொடையால் எழுந்து வளர்ந்து வருகின்றன. ஏழை மாணவர்களும், யாத்திரீகர்களும், அந்தணர்களும் அன்னதானம் பெறுகிறார்கள். இலவசமாக ஏழை மக்கள் பலர் மருத்துவம் பெறுகிறார்கள். நீராடுவதற்குப் பல தீர்த்தக் கட்டங்கள் இவர்கள் அருளால் புதுப்பிக்கப்பெற்றுள்ளன. அகதிகள் பலர் நன்கொடை பெற்றுவருகிறார்கள். தண்ணீர்ப் பந்தல் பல தோற்றுவிக்கப்பெற்றன. பல தமிழ் நூல்கள்

இவர்கள் அருட்கொடையால் வெளிவந்துகொண்டிருக்கின்றன. பன்னிரு திருமுறைகள், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் இவைகளை அச்சிட்டு வழங்கி வருகின்றார்கள். புலவர்கட்கு நன்கொடைகளும், சிறந்த விருதுகளும், பரிசில் களும் வழங்கிவருகிறார்கள். சிறந்த பசுக்களை வளர்ப்பதற் கென்று சில பரிசுத் திட்டங்கள் அமைத்துள்ளார்கள். இரண்டு நூற்றுக்கும் மேலான அறக்கட்டளைகளை நிறுவி ஒல்லும் வகை யெல்லாம் அறங்கள் பலவற்றை ஆற்றிவரும், அறக்கொடை வடிவினர் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து செந்தமிழ் மொழியையும், சிவநெறியையும் பேணிவளர்க்கச் செந்திலாண்டவன் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

வாழ்க காசிவாசி அருணந்தி சுவாமிகள் !

அடியேன்,

வி. சா. குருசாமி

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித்
தமிழ்ப்பேராசிரியர்.

சிவஞான சித்தியார்

மனமது நினைய வாக்கு
வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங்
கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ்
செயலற மானால் யார்க்கு
முனமொரு தெய்வ மெங்குஞ்
செயற்குமுன் னிலையா மன்றே.

— அருணந்திசிவம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடாலயத்தின் தலைவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் அவர்களுக்கு

61 ஆவது ஆண்டு தொடங்கும் ஆவணிமூலத் திருநாளில்

அருளிய

ஆசியுரை

நம் தருமைக் கண்மணியுட் சிறந்த நன்மணியாகிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் அவர்கட்கு 11–9–59 அன்று அறுபத்தோன்றும் ஆண்டு தொடங்குகிறது. அவர்களைத் திருவருளும் குருவருளும் இதுவரையில் இனிது வாழ்வித்து வருதல் போன்று இனியும் நீடுவாழ்வித்து வருவது திண்ணம். அவர்கள் 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களிடத்தில் அருளுபதேசம் பெற்றவர்கள். அவர்கள் சிவதல யாத்திரை செய்தருளிய காலத்தில் உடன் சென்று திருக்கோயில்தோறும் திருமுறைப்பாடல்களைப் பண்ணிசையுடன் தம் இனிய குரலால் ஓதி அம்மையப்பரையும் ஆசாரியரையும், அடியார் முதலியோரையும் மகிழச் செய்தவர்கள். வாய்த்த போதெல்லாம் திருமுறை ஓதி யின்புற்றுவரும் திருவருட் செல்வர்கள் ஆதலின், அவர்கள் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்ற அருள்வாக்கின் உண்மைப் பொருளை அனுபவத்தில் அறிந்தவர்கள். இதுவே அவர்களது சிவபக்திப் பெருக்கைத் தெரிவிக்கப் போதியதாகும்.

அவர்களது குருபக்திக்கு அளவேயில்லை. அவர்களை அடிமைகொண்டு ஆண்டருளிய குருமணியின் வழிமுதலான ஸ்ரீ குருஞானசம்பந்தரையும் வழித்தோன்றல்களையும் மறவாமல் வாழ்த்தி வணங்கிவரும் சீலம் மிக்கவர்கள். அவர்கள் நினைவாகப் பல பரிசுகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

குருபக்தியிற் சிறந்தவர்கள் திருக்கேதார தரிசனத்தை நாம் பெற வேண்டும் என்று எண்ணி நம்மை அழைத்துச் சென்ற திறமும், தரிசிப்பித்த வண்ணமும், காசியில் பல முறை குருவழிபாடு செய்த மெய்ப்பேரன்பும் நம் உள்ளம் விட்டகலாத சோக்கேசன் திருவுள்ளம் அறிந்து பேரிதுவந்த உண்மைகள். தம்மைப்போலத் தம் வழித் தோன்றல்களும் குரு பக்தியிற் சிறந்து வாழ்தல் வேண்டும் என்ற உயரிய நோக்கம் உடையவர்கள். அதைச் செய்கையிலும் விளக்கி வருபவர்கள். அகத்திலும் புறத்திலும் சிறிதும் வேறுபாடில்லாத மெய்ந்நெறியில் அமைந்த குருபக்தியின் தனிவடிவாகத் திகழ்பவர்கள்.

அவ்வகையில் எல்லாரும் குருபக்தியும் தெய்வபக்தியும் பெற்று இனிது வாழ்தல் வேண்டும் என்று உளங் கொண்டவர்கள். அதனால், கல்விக் கழகங்களில் திருமுறைகள் முதலிய அருள் நூல்களின் பாமணித் திரட்டுக்களை அளித்து, அவற்றைப் பாராயணம் செய்தலால் அகத்தூய்மையும் அவற்றிற்குப் பரிசு கொடுத்தலால் புறப் பொருட்பேறும் எய்தச் செய்து, அவ்வகையில் குருபக்தியும் தெய்வ பக்தியும் விளைந்து வளர்ந்துவரச்செய்ய நிதி வைத்திருக்கிறார்கள்.

உலகெங்கும் சமயாசாரியர், சந்தானசாரியர், தம்மரபிற்குரிய குருமகாசந்நிதானங்கள், பழவடியார்கள், ஸ்ரீ காசி மடத்திற்குரிய தம் முற்றோன்றல்களின் நினைவு எப்போதும் உண்டாகப் பல்வேறு நிதிகளை ஆயிரக்கணக்கில் வைத்து, அவரவர் நினைவு நாட்களில், மக்கள் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் உண்டும் உறங்கியும் எழுந்தும் வரும் போதெல்லாம் அவரவர் நினைவு இயல்பாகவே வரச்செய்திருப்பது யாவரும் வியக்கத் தக்க செயலாகும்.

தம் ஆட்சிக்குரிய ஸ்ரீ காசிமடத்தின் முதல்வர் ஸ்ரீ குமர குருபரருக்கு அருளுபதேசம் புரிந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நினைவுப் பரிசு களுக்காக ஸ்ரீ வைகுண்டத்திலும், வாரணாசியிலும் நிதிவைத் திருப்பதும், குமரகுருபரர் அவதாரம் செய்த ஸ்ரீ வைகுண்டத் தில் இடறி விழுந்த இடமெல்லாம் குமரகுருபரர் திருநாமம் நினைவில் வரச்செய்து மகிழ்ந்து மகிழ்வித்ததும், ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் நினைவுப் பரிசு களுக்காக மாயூரம் சென்னை, ஸ்ரீகாசி, திருநாரையூர் முதலிய தலங்களில் அறக்கட்டளைகள் ஏற்படுத்தி நிதி அமைத் திருப்பதும் தம் நன்றியறிதலாகிய பண்புடைமைக்குச் சிறந்த சான்றுகளாகும். ஆடுதுறையிலும் ஓர் உயர்பள்ளி நிறுவியருளினார்கள்.

அக் குமரகுருபரர் அடிமையுற்ற இடத்திலேதான் தாமும் அடிமையுறல் வேண்டும் என்று எண்ணி எண்ணியவாறே தருமைக்கு வந்து செந்திலாண்டவன் திருப்பெயரோடு விளங் கிய 23 ஆவது குருமகாசந்நிதானத்தில் அருளுபதேசம் பெற்று அடிமையுற்ற பெருமை உடையவர்கள். அப்பொழுது மிக்க இளமை. அக்காலத்திலும் ஸ்ரீ காசிக்கு ஏகிக் கங்கை யாடி ஸ்ரீ விசுவலிங்கமூர்த்தியை வழிபடும் இன்ப வாழ்வு வாய்க்கப்பெற்ற பெருந் தவ சிரேட்டர் அவ்விளமைத் துறவில் உண்டான சிவநாமஸ்மரணம் இன்று எங்கும் "சிவ சிவ சிவ சிவ சிவ சிவ" என்று பிரகாசிக்கின்றது. தாம் மட்டும் ஓதிப் பெறும் பயனிலும் மிகுதியாக உலகோர் ஓதிப் பயன் பெறல் வேண்டும் என்னும் அவர்களது கருணைப் பெருக்கத் தின் ஞானச் சின்னமே 'சிவ சிவ' விளக்கம். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது நம் முன்னோர் கோள்கையன்றோ!

மக்கள் வயிற்றுப் பசிதீர அன்னதானங்களுக்கும், வாழ்க்கைத் துயர்தீரப் பரிசிற் கோடையாகிய சொன்ன தானங்களுக்கும், அறியாமை தீரப் பலவேறு தேர்வுகளுக் கும், அருளைப்பெற்றுய்யத் திருப்பதிகக் கல்வெட்டுக்களுக் கும், ஞானவளர்ச்சி எய்த நல்ல நூல் வெளியீடுகளுக்கும்,

செந்தமிழ் நூல்களை அழியாமற் காக்கத் திருக்குறள் முதலிய கல்வெட்டுக்களுக்கும், பல லட்சம் நிதி வைத்துச் செவ்விதின் நடைபெறச் செய்வித்து வருதலை அறியாதார் அறியாதாரரே. யாத்திரையின் பெரும்பயனை நன்குணர்ந்தவர்கள், இந்தியாவி லுள்ள முக்கியஸ்தலங்களை யெல்லாம் தரிசித்தவர்கள். சீரிய தீர்த்தங்களில் எல்லாம் நீராடிப் பேரானந்தம் உற்ற வர்கள். அதனுல், திருக்கேதாரம், திருக்காசி யாத்திரை செல்வோர்க்கு வழங்கும் பொருட்டு நிதி வைத்திருப்பது அவர்களது கருணையுள்ளத்தின் பிரதிபிம்பம் ஆகும்.

அக்காலத்தில் குமரகுருபரர், வடநாட்டில் முகமதியர் ஆட்சியில் அம் முகலாயரும் மதித்து வழிபடத் திருவருட் சிறப்பையும் சைவ சமயத்தின் உண்மையுயர்ச்சியையும் நிலைநாட்டினுர். துளசிதாசரது இராமாயணத்தின் தோற்றத் திற்கும் அதில் கம்பராமாயணத்தின் சில கருத்தமைந்த மைக்கும் குமரகுருபரர் தவமும் புலமையும் அருள்நெறியுமே காரணம்.

இக் காலத்தில், நம் கண்மணிகளுட்சிறந்த நன்மணி யின் நன்முயற்சியால், காசி, அலிகார், டேல்லி, லக்நோ, கல்கத்தா நகரங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம்பற்றிய தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்த நிதிவைத்திருக்கும் பெருமையை வடநாடு வாயாரப் போற்றுகின்றது. காசிப்பல்கலைக் கழகத்தில், சைவசித்தாந் தம் போதிக்க நிதி வைத்து அதற்கென ஒருவரை நியமித்திருக் கிருர்கள். இன்றும் அங்குத் தருமையாதீனத்துச் சித்தாந்தச் செல்வர் ஸ்ரீ. கி. சிவராமன் M. A. அவர்களால் ஸ்ரீ காசிமடத் தின் நிதிச்சார்பில் சைவசித்தாந்த போதம் நடைபெறு கின்றது. அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் வட நாட்டில் ஒருவரை அனுப்பிச் சைவசித்தாந்தச் சொற் பொழிவுகள் ஆற்றும்படிக்கு நிதி வைத்திருப்பதும் வட நாட்டிற் பலர் பல்கலைக் கழகங்களில் அவற்றை விரும்பிக் கேட்டு வருவதும் அனைவரும் அறியத்தக்கன.

நிர்வாகத்தையும் வழுவாமல் நடத்துபவர்கள். கடமைகளைச் சிறிதும் குறையாமல் நிறைவேற்றுபவர்கள். கட்டளைப் படி இவர்கள் அறங்களைச் செய்யப்பெருத நிலயங்கள் இரா. உயிர்ப்பிணி தீர்க்கும் கோயில்களிலும், உடற்பிணி தீர்க்கும் வைத்தியசாலைகளிலும், அறியாமைப்பிணிதீர்க்கும் கல்விச்சாலைகளிலும் ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தி தம்பிரான் அவர்களின் அறங்கள் ஞானதாண்டவம் புரிகின்றன அதனால், அவர்கள் இயல்பாகவே 'நல்லறங்காவலர்' எனத் திகழ்ந்து வருகின்றார்கள்.

சிதம்பர தரிசனம் கிடைக்கப்பெறின் மனித்தப்பிறவி இனித்தமுடையது; அவசியம் வேண்டுவதே என்பது அப்பர் திருவுள்ளம். குமரகுருபரரும் குருவருளை மறவாத அடியார்க்கு அடிமைத்திறம் வாய்ந்த பிறவி எதுவாயினும் வேண்டும் என வரங்கேட்டார். இந்நெறியையே கடைப்பிடித்தொழுகும் அருள்நந்தி மாமுனிவரும் சிவதரிசனமும் குருதரிசனமும் பெற்றுக்கொண்டேயிருத்தலின், அவ் வாசமலர் மென்கழல் வணங்க வந்த பிறப்பை வணங்கும் உத்தமர் ஆவார்.

ஐம்பொறிகளையும்வென்று உள்ளம் உருக்கி உள்ளொளி பெருக்கிக் குருவாணை கடவாமல், ஞானசாரம் தவறாமல், சிவத்தியானத்தினால் திருவருளையே பெற்ற பெருமையுடையவர்கள். ஆதலின் அவர்களை அத்திருவருளும் குருவருளும் இன்னும் பலநூறாண்டு பல்லாண்டு வாழ்விக்கும்.

திருக்கேதாரம் முதல் திருக்குமரி வரையிலுள்ள தலங்களையெல்லாம் தரிசித்த சிவபுண்ணிய சீலமும், ஜெபம், த்யானம், சிவபூஜை முதலியவற்றைச் செய்வதிற் சாலச் சிறந்து விளங்கும் திருவருட்பேறும், அரைக்கோடி ரூபாய்க்கு மேல் அறக்கட்டளை நியமித்த சிவதருமமும் அவர்களை என்றும் இனிது வாழ்வித்து வரும். எல்லாம்வல்ல ஸ்ரீ சோக்கலிங்கப்பெருமான் திருவருளும் குருவருளும் அவர்களுக்கு ஆரோக்கியம் முதலிய நலமெல்லாம் அளித்து நீடூழி வாழ வைத்துக் காத்துவரும்.

வாழ்க. வாழ்க. வாழ்க.

வாழ்த்து

பேசுற்ற உலகியலிற் சுழன்றுமதி மயங்கிநெறி
 பிறழ்ந்து மேவும்
ஏசுற்ற போலிகளால் எய்தியதன் னிழிதகவை
 எண்ணிப் பன்னாள்
மாசுற்ற துறவு முன்னே மாண்பதனே அருணந்தி
 மாமுனிநின்
தேசுற்றுப் பெற்றிடநிற் றேடிவந்த தூழிபல
 சிறந்து வாழ்க.

அந்நாளிற் றிருக்கடவூர்க் கலயர் சடை யப்பரின்கோ
 ணதனைத் தீர்த்தார்
இந்நாளி லீங்குளபல் கோணல்களை நுந்தம்மா
 லேளிதி னீக்க
மன்னான அமுதகடே சப்பெருமான் வழங்கவரு
 மாண்பிற் கேற்பப்
பன்னாளும் ஆண்டு நல்ல நெறிசெலுத்தி இனிதூழி
 பலவும் வாழ்க.

உலகிலுயிர் கழறியதை யுற்றறிந்தே ஆட்சிசெய
 உன்னி முன்னாள்
இலகுவர மிறையவர்பால் பெறுசேர மான்பெருமா
 ளென்ன நீவீர்
பலமொழிகள் பயின்றுபெறு புலமையினால் உயிர்கள்மனப்
 பான்மை யோர்ந்தே
தலைமைபெறக் காசிமடாலயம் ஆண்டு பலவூழி
 தழைத்து வாழ்க.

சீ. இராமலிங்கம்
தமிழாசிரியர், முனிசிபல் உயர்நிலைப்பள்ளி,
மாயூரம்.

தமிழ்விடு தூது

பூவாருந் தேனே புகழ்விரிக்குந் தெண்ணிலவே
பாவாரு மின்பப் பசுந்தமிழே ! - மேவாரும்
மேவுஞ் சுவையுடைய மேன்மைத் திறங்கெழுமிக்
கோவுடைய இன்பம் குறித்தளிப்பாய் - நாவுடையோர்
போற்றுக் கடங்காத பொற்புடையாய் வாணாளில்
சாற்றிப் பிழைப்பார்க்குச் சார்பானாய் - நோற்றபயன்
நின்னைத் தழுவியிங்கு நீளின்பம் பெற்றிடுதல்
முன்னை வினையான் முடி.வாமே ; - என்னை
இளமைப் பருவத்தே இன்னொளியைக் காட்டி 5
வளமை விழைந்தளித்த வள்ளால் ! - தலைமை
நினக்கென்றே யாக்கி நெடுமொழிகள் பேசி
மனக்கவலை தீர்ந்தோம் ; மகிழ்வால் - மினற்கொடியே !
நாளும் நினைப்பயில்வேன் நாளும் நினைத்தொழுவேன்
மூளும் மனமகிழ்ச்சி மோதுதலால் - தோளும்
உடலுமிங்குப் பூரித் துரைக்குமுரை கேளாய் ;
கடலும் நினக்குவமை கண்டால் - உடலும் ;
உனக்கமைந்த செய்யுள் உரைபலவும் தோன்றும்
கணக் கென்றன் பாட்டுக் கடங்கா ; - குணக்கே
அலையாழி ; தெற்கே அழகுக் குமரிக் 10
கலைத்தாய் ; வடக்கே கருதும் - நிலைத்தாய்ப்
புகழ்விரிக்கும் வேங்கடமாம் ; போற்றிடுமேற் பாலில்
இகழ்வில் மலைப்புறமாம் இங்கே - அகழ்வார்க்குப்
பொற்புதைய லாகப் புவியிற் கிடைத்திருப்பாய்
கற்பனையன் றீது ; கதையன்று ; - நற்பொலியும்
சங்கத் திருப்புடையாய் ; சான்றோர்கள் காப்பியமாம்
துங்கத் தலமுடையாய் ; தோல்வியிலாய் - பங்கமுற்று
மற்றோர் மொழிப் பெண்டிர் மண்மங்கை நோக்கிடவே
கற்றோர் மடியின் கருத்திருப்பாய் - பெற்றோர்
நினைப்பெற்றோ ரன்றோ நெடும்புகழைக் கொள்வோர் 15
பினைப்பெற்றோர் பெற்றோரோ வென்றே - எனைச் சிறப்பும்
உற்றோர்கள் கூற உறுவாய் ; ஒளி விரிப்பாய் !
மற்றோர்கள் மாற்றம் இகழ்விப்பாய் ; - உற்றோதம்
பல்காற் குறைக்கப் பகருந் தமிழ்ச்சுவடி

ஒல்காத் தமிழ்க்கொடியே ! ஒண்டொடியே ! - மல்குமொரு
கோரிக்கை யீன்று குறிப்பேன் ; இனிக்கேளாய் !
வாரிக்கொள் செல்வம் வயங்குதல்போல் - பூரிக்கும்
பழமை வயங்கும் படிநல் இயலாங்
கிழமை கிளரும் திருநூல் - மழவியலாஞ்
செவ்வி தெரிக்கும் சீர்மைத்தொல் காப்பியமும்
ஒவ்வுமதன் உட்கிடையும் ஓதிடுவார் - தெவ்வெனினும்
ஓடித் தழுவி உவத்தற் கிடமாகத்
தேடிக் கிடையாத தெண்ணிதியாம் - கோடி
கொடுத்தும் பெறவியலாக் கோதில் விழுநூல்
எடுத்தேத்து நற்றிணையாம் இந்நூல் - அடுத்ததன்பின்
ஆடித் திறம்போல் அமைந்த குறுந்தொகையும்
நாடிப் பயில்வார் நலம்பெருகக் - கூடி
இயன்றிடுசீர் ஐங்குறுநூ றென்றதன்பின் நல்லோர்
முயன்றுரைத்த சேரர் முழுமை - வயந்துலங்கும்
நல்லபதிற் றுப்பத்தும் நற்கருணைத் தெய்விகமாம்
வெள்ளம் பெருக்குபரி பாடலும் - விள்ளரிய
கற்றறிந்தோ ரேத்தும் கலிபோ டகம்புறமும்
உற்றிருந்த எட்டுத் தொகை நூலாம் - உள்ளியவை
நெஞ்சத் திருத்திப்பின் நேரியபத் துப்பாட்டும்
விஞ்சுபுக ழீரொன்பான் வென்னூலும் - எஞ்சலின்றி
ஓதியபின் காப்பியங்கள் உள்ளபடியே தோய்ந்து
கோதில்லாச் சைவநெறி கூட்டுவித்த - சோதிமொழிச்
சாத்திரமும் சைவத் தனிச்சான்றோர் வாய்மலர்ந்த
தோத்திரமும் கற்றுத் துறைபோகிப் - பாத்திறத்துத்
தொண்டர் புராணத் துகளறுமாச் சீரமுதும்
கண்டு கழியுவகைக் காலூன்ற - மண்டும்
பெருங்காதல் கொண்டேன் ; பேசுதமிழ்த் தாயே !
மருங்காக வந்தென் மனத்தே - ஒருங்குனது
நல்லருளை யீவாய் நலங்கொடுப்பாய் உன்னுடைய
தொல்லியலை என்னால் துலக்கமுறச் - சொல்லுதற்கு
முற்றும் இயலாது ; முன்னாளில் உன்னருமை
கற்றுத் திறமிகுந்து காத்தவருள் - பற்றறுத்த
சைவத் துறவியர்கள் சால்புத் திறங்கூட்டி
தெய்வத் திறத்தோடு தேர்ந்துணையும் - பொய்யின்றி
காத்தாரன் றேஅக் கருதும் திருமடத்துள்

முத்தோங்கும் ஒன்று மொழியக்கேள் - ஏத்தும்
பெரும்புகழான் பாரிற் பிறங்கும் பணிகள்
தரும்புகழான் அன்னான் தனயே - உறும்படிநின்
இன்பப் பனுவல் வழக்கால் எடுத்துரைப்பேன்
அன்புக் குரியாய் ; அறந்தெரிந்தாய் - முன்புற்ற
என்குறையை நீயே எடுத்துரைக்க வல்லாயால்
தென்பில்லை மற்றோர் திறத்தெல்லாம் - மன்புவியில்
எந்நாட்டும் முன்னாடா ஏத்துபெருஞ் சீரார்த்
தென்னாடு செல்வாய் திறனுடையாய் - அந்நாட்டில்
சோறு மணக்கின்ற சோழவளநாட்டில்
நீறு மணக்கும் நெடுந்தலமாய்க் - கூறுபுகழ்ச்
செந்தூரிற் கந்தன்றன் சீரருளால் வாய்மலர்ந்து
வந்தூரும் செஞ்சொற் றமிழ்பாடி - நந்தூரும்
நாட்டுத் தலங்கள் பலவும் நயந்தொழுகிப்
பாட்டுத் திறத்தால் பரமனடி - வேட்டுருகி
நற்றருமை வாழ்வேந்தர் நன்மாசி லாமணியார்
பொற்றாளின் செல்வப் பொலிவோடு - உற்றடங்கி
அற்புதங்கள் செய்து அருநகரா குங்காசிப்
பொற்புடைய நன்னகரிற் போந்திருந்து - கற்குனிக்கும்
வில்லான் விசுவேசன் வெல்லுந் திருவருளால்
சொல்லாற் சிறந்து துணைபெருக்கி - நல்லோனாய்
சைவத் தமிழ்பரப்பும் சான்றோன் ; அறநெறியாந்
தெய்வந் திகழ்வித்த தெள்ளியோன் - மெய்யார்
குமர குருபரனும் கோதிலா ஞானி
அமரும் பதியாம் பனசை - அமரர்களும்
செஞ்சரண மேத்திச் சிரம்பணியும் மாதுமையாள்
செஞ்சடையப் பன்னருளே சேர்ந்திருக்கும் - நெஞ்சார்
அருணந்தி மாமுனிவன் ஆன்றவிந்த கொள்கைத்
தெருணயந்த தேவன் ; திருவன் ; - பொருணயந்த
தெய்வத் தமிழ்ப்பனுவ லத்தனையும் தென் பெருக்காய்
வையத்துக் கென்றும் வழங்கிடுவோன் - மெய் வைத்த
நெஞ்சுடையான் ; நல்லறமே நீளுந் திருவுருவான் ;
அஞ்சுமொன்றி நிற்கும் அறிவாளன் - பஞ்சமர்ந்த
பாதத் தரிவையொரு பாகத் தணைக்குமிறை
வேதத் திருநெறியாம் வெல்நெறியும் - போதக்
குருநெறியும் கொண்டு குலவுகின்ற வாய்மை

மருநெறியே கொண்ட மனத்தான் ; - குருவருளே
கண்ணாகக் கொண்டு களிப்பான் ; இமயமுதல்
தண்ணார் குமரித் தடந்துறைவாய் - முன்னாக
எங்குமவனிட்ட ஏற்றவறக் கட்டளைகள் 55
தங்குமிது கண்டிருப்பாய் தண்டமிழே ! - பொங்கிவருங்
காதற் பெருக்கிற் கசிந்தே இசைபாடி
ஆதல் பெருகும் அறவடிவோன் ; - போதலிலா
மெய்யடியார் சூழ மிகுந்திருக்கே தாரத்துச்
சைவநெறி காட்டித் தனி நடப்போன் ; - கையகத்து
நெல்லியென நல்லறத்தின் நீள்பயனைக் கண்டிருப்போன் ;
எல்லியென வாய்மை இசைபரந்தோன் ; - தொல்லிமயஞ்
சூழுங் கயிலாயச் சொல்லற் கரியமலை
தாழும் தருமைத் தனியரசன் - வாழுமிசை
ஆதீனத் தோங்கும் அருமைக் குருநாதன் 60
போதீனுங் கொன்றைப் பொழிற்றருமை - மாதீனும்
பங்கிற் பரமன் பதமலரை ஆலயங்கள்
எங்கும் பரவுமிரு பத்தைந்தாம் - எங்குரவன்
நல்லடிகள் போற்றும் நலமுடையான் ; - அன்னாளின்
மெல்லடிகள் போற்றி மிகுவாயே ! - வல்லமையாய்
இன்பங் கொழிக்கும் இகலற்ற மாத்தமிழே !
அன்புங் கலந்த அருந்தமிழே ! - முன்புவியில்
வாழ்ந்த முனிவோரை வையம் உணர்தற்குச்
சூழ்ந்தவிவ னேயிங் குவமை யென்பாய் ! - சூழ்ந்திருப்போர்
தெய்வத் திருமந் திரம் கூறத் தெண்ணிலவாய் 65
மெய்யிற் றிருநீறு மேலொளிப்பப் - பொய்யில்லான்
ஆவணிநன் மூலத்தே ஐயன் பிறந்தவனி
மேவத் தவஞ்செய்த மேனாளில் - தேவனென
ஆறுபத்தாம் ஆண்டெய்தி ஆன்றோர்கள் கூடிவரத்
தேறுநீர்க் கங்கைத் திருநீரில் - ஆறுடைய
செஞ்சடையோன் றன்கருணைத் தெண்ணீருடனாடி
அஞ்செழுத்தை யோதி அருமரபாங் - கஞ்சமதில்
வீற்றிருக்கும் வேந்தை விழைந்தினிது வாழ்த்திடுவாய்
தோற்றமய ஞயுன்னே நுண்பொருளால் - ஏற்றமுறப்
போற்றி வளர்த்த புனித மிகும்பெருமான் 70
ஆற்றலுடைப்பே ரருள்வாழ்த்திச் - சாற்றிடுவாய்
பேசி யருளார் பெருமுகமன் கூறியபின்

ஆசி யருளி அணைத்திடலும் - மாசில்லாச்
செந்தமிழே ! என் நிலைமை சேர்க்குந் திறத்தாலே
சிந்தைசேலச் சோல்வாய் ; - சிறப்புறுவாய்
மாமுனிவன் நின்னை மடியிருத்திச் சேவ்விசையாற்
பாமோழிவன் கேட்டுப் பதமடைவாய் ! - ஆமுறையால்
யான்வாழ என்றும் நலம்வாழ நற்கருத்துத்
தேன்வளர நல்ல திறம்வளர - ஊன்வளர
என்னை உருவாக்கும் இன்னருளை அன்னவன்றன்
முன்னைத் தவத்தான் முகந்தேற்று - நன்னரவன்
போன்னடிகள் போற்றிப் போலியும் அருள்தாங்கி
என்னகுகு வாராய் இனிது.

அடியேன்,

சொ. சிங்காரவேலன்

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித்
தமிழ்ப்பேராசிரியர்.

சிவஞான சித்தியார்

சிவஞ்சத்தி நாதம் விந்து
சதாசிவன் றிகழு மீச
னுவந்தரு ளுருத்தி ரன்றன்
மாலய னொன்றி னொன்றாய்ப்
பவந்தரு மருவ நாலிங்
குருவநா லுபய மோன்று
நவந்தரு பேத மேக
நாதனே நடிப்ப னேன்பர்.

— அருணந்திசிவம்.

தருமையாதீனம் ''சண்முக விலாசம்'' திறப்பு விழாவில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகட்கு
மாலை சூட்டி ஆசியருளல்

தருமையாதீனம் "சண்முக விலாசம்" திறப்பு விழா

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள்
சண்முக விலாசத்தைத் திறந்துவைத்த தோற்றம்

தருமையாதீனம் "சண்முக விலாசம்" திறப்பு விழாவில்



24 & 25 ஆவது குருமகாசந்நிதானங்களின்
திருவுருவப் படத்தின் முன்னர்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்களும்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசிசுவாமிகளும்

தருமையாதீனம் "சண்முக விலாசம்" திறப்பு விழாவில்



சண்முக விலாசத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருமுன்னர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் திருமுறை ஓதுகிறார்கள்

ஆற்றுப்படை

காப்பு

திருப்பனசைக் காசித் திருமுனிவன் சீரை
விருப்பமோடாற் றுப்படையால் வேண்ட - மருப்புடைய
ஆனை முகத் தானை அடியார்க் கருள்புரியும்
தேனை மனத்திருத்து வேன்.

நூல்

இயல்இசை நாடகம் எனும்முத் தமிழ்நூல்
இலக்கண முறையில் இனிதுறக் கற்றுத்
தோல்காப் பியமேட் டுத்தொகை நூல்கள்
பத்துப் பாட்டுடன் பதினெண் கீழ்க்கணக்
கைம்பெருங் காப்பியம் ஐஞ்சிறு காப்பியம்
இதிகாசங்கள் இன்தமிழ்ப் புராணம்
பிரபந்தம் பலவும் பிறவகை நூல்களும்
கற்றுத் தெளிந்து கல்விக் கடல்கடந்து
மனத்தில் அமைத்து மகிழ்வோடு சார்ந்தவர்க்
கேளிதின் விளங்க எளிமையின் விரிக்கும்
செந்தமிழ்ப் புலவீர் ! செந்நா வலரே !
தமிழோடு பிறந்தது தாங்கா வறுமையென்
றெல்லா மக்களும் எடுத்துக் கூறும்
பழமொழி அழிய ஓர் வழிகூறுவேன்
பண்டிதர் எனும்பெயர் படைத்தோர் மக்கட்
செல்வம் பெருகிடச் சிறப்பிலா வாழ்வு
வாழ்வதும் வறுமை அவர்களை வதைப்பதும்
காண்பீர் ! கிழிந்த கஞ்சுக மணிந்து
பன்னாள் முன்னே எடுத்த பட்டாடை
கந்தல் மறையக் கவின்பெற மடித்துக்
கழுத்தை அலங்காரம் செய்யக் கண்களில்
ஒளிமிகக் குன்றி உருவம் விளர்த்துப்
பஞ்சப் பாடல்கள் பாடிடும் நிலைமை
முற்றும் தொலைந்து முழுமையும் வேறாய்
மாறிடும் நிலைமையை மகிழ்வோடு கூறுவேன்

வான்மழை பொய்ப்பினும் தான்வளங் குன்ருக்
காவிரி பாயும் சோழநன் ஞட்டில்
மண்ணியாற் றின்கரை மன்னிய திருநகர்
தாடகை புனைந்த தகைமிகு மாலே
சூடிடக் குனிந்த சோதியின் உறைவிடம்
அன்பு நாண்கொண்டு அடியவர் கலயர்
நிமிர்த்திட நிமிர்ந்த செஞ்சடையப்பர்
இருந்து அருள்செயும் எழில்வளர் பனசை
மாநகர் அங்கண் மன்னிய திருமடம்
செந்திற்குமரன் திருவருள் பெற்றுக்
கந்தர் கலிவெண்பா முதலிய தமிழ்நூல்
விரித்துத் தமிழ்மொழி விளக்கம் தந்து
தருமைத் திருநகர்த் தகைசால் குரவர்
மாசிலாமணித் தேசிகர் தம்பால்
ஞானஉப தேசம் பெற்றுக் காசியில்
சைவம் பரப்பித் திருமடம் நிறுவிக்
காசி வாசியாய் விளங்கிய குரவர்
குமர குருபரர் என்னும் பெயரிய
பேரருளாளரின் பின்னுல் தோன்றிய
ஞான சீலர்கள் வாழ்ந்திடு திருமடம்
காசிமடமெனப் பெயரிய திருமடம்
விளங்கும் அதனுள் வீற்றினிதிருந்து
அருளொடு பொருள்பல அளிக்கும் குரவர்
இமயம் குமரி இடைப்பட அறங்கள்
பலவும் புரியும் பண்புடைச்சீலர்
திருமுறை நூல்கள் திருத்தமாய்ப் பலவாய்
இலவசமாகப் பதித்து எல்லோர்க்கும்
வழங்குவர் கல்விச்சாலைகள் வளமாய்
அமைப்பவர் அன்ன தானங்கள் அளிப்பவர்
சிவசிவ முனிவராய்ச் செப்பும் செம்மல்
அருணந்தியென்னும் அருட்கொடை வள்ளல்
இருப்பர் இன்முகங் காட்டி இன்னுரை
பகர்ந்து வரவேற் பளிப்பர் திருமட
மரபு பிறழா வகையில் மாண்புடன்
அடக்கம் பணிவு அன்பு மேற்கொண்டு
சென்று பணிந்து சிவசிவ ஓதி

நீறு வாங்கி நெற்றியில் கொள்வீர்
பன்னிரு திருமுறை மற்றும் பரிசுகள்
பலவும் நல்குவர் பண்போடு பெற்று
உண்டு மீண்டு உளம்மிகு மகிழ்வோடு
வாழ்ந்திடும் வகைகள் பலவும் பெற்று
என்றும் இன்பம் பெற்றுக் குரவரை
வாழ்க வாழ்க வாழ்க என்றேத்தி
இமயத்தீண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த நுண்துளி
பலவினும் வாழிய என்றே வாழ்த்தி
நிலமிசை நாளும் நிலைத்து
வாழலாம் வருவீர் வளம்பெற வருவீர் !

வி. சா. குருசாமி

சிவஞான சித்தியார்

சத்திதா ளுத மாதி
தாளுகுஞ் சிவமு மந்தச்
சத்திதா ளுதி யாகுந்
தரும்வடி வான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமு மாகுஞ்
சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற்
றெல்லாமாஞ் சத்தி தானே.

— அருணந்திசிவம்.

வாழ்த்து

உலகம் உய்ய உவந்தனன் ஞாயிறு
பலகலை பரவ வந்தனன் பாரினில்
அருணந்தி என்னுமோர் அறவோன் ஆசான்
குருபரன் வழிவழிக் குணக்குன் றனேன்
அன்னவன் பற்றுகள் அற்றான் அறுபத்து
ஒன்றில் என்றால் ஒன்றுமோ இல்லை
பற்றுப் பற்றிட முயன்றது ; ஆனால்
பற்றெலாம் தோல்வி யுற்றன கண்டீர் !
பதிப்பணி பசுப்பணி பற்பல செய்பவன்
கதியே கேதார நாதன் திருத்தாள்
என்றெண் ணிருந்து ஆண்டாண்டு தோறும்
சென்றத் திருவடி சேவித் திருப்பான்
அறங்கள் கோடி ஆக்கினன் உலகில்
மறவாது சைவமும் தமிழும் தழைக்க
அவன் வழிநின்று ஆருயிர் உய்யச்
சிவனருள் புரிந்திடப் பல்லாண்டு வாழ
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ
என்றும் அகலாது இதயத் துறையும்
அன்னார் அரனடி அருளால் வாழிய
தென்னாடுஞ் சீர்ச் சைவமும் போன்றே.

கை. முருகையாப் பிள்ளை, B. A., L. T.,
தலைமையாசிரியர், கீழைக்கலை உயர்பள்ளி,
தருமபுரம்.

வாழ்த்துக்கள்

ஆயிரத்துத் தொளாயிரமாம் ஆண்டில் பாண்டி
அருநாயகி புரத்தில் சைவ நல்லார்
ஓயாதே அறஞ்செய்வார்க் கவர்தாம் தோன்றி
ஒப்பற்ற கல்வியினை நெல்லை இந்து
வாய்ந்தபுகழ்க் கல்லூரி தனிற்ப யின்று
வையத்தில் முதலமரம் எழுந்த காலை
போயங்கே தம் ஆற்றல் புரியக் காட்டிப்
பரஞ்சோதி தனையொத்தார் புகழே மிக்கார்.

பேர்பெற்ற அசோகனெனும் மன்னன் போன்று
போர்செய்ய மனத்தமைதி இழந்தா ராக
சீர்பெற்ற திருக்கயிலைப் பரம்பரைக் காகும்
சீர் தருமைக் குருமுதல்வர் அருளிற்காட்ட
பேராற்றல் மிகுவிக்கும் துறவால் ஞானப்
பிரகாசன் நற்றொண்டர் ஆனார் அன்றே
ஓராற்றல் தனிற்கலந்த ஒருவர் ஆனார்
ஒள்ளியராய்ச் சமயநெறி பரப்ப லானார்.

திருக்கோவில் பலவற்றில் தொண்டு செய்தே
தேசமெங்கும் சைவமணம் எழுப்பிப் பின்னர்த்
திருப்பனசைக் காசிமடத்தின்மு தல்வர்
திருவருளின் அடியெய்தி மறைந்த ஞான்றை
இருபதா வதுபட்டம் ஏற்றார் நல்ல
இறைபணியை இனிதாற்றி மக்கள் வாழ்வில்
இருநூற்றின் பலவான அறங்கள் செய்தார்
இதுகண்டு மக்களெலாம் மகிழ லுற்றார்.

திருமுறைகள் வளர்தற்கும் சிறந்த கல்வி
தேசமெங்கும் வளர்தற்கும் தெய்வ நல்லான்
திருமறையும் வளர்தற்கும் தீர்ந்த சைவ
சித்தாந்தம் வளர்தற்கும் அன்ன தானம்

மருத்துவங்கள் வளர்தற்கும் அறங்கள் செய்தார்
மாட்சிமிகு பேரறங்கள் இனியும் செய்வார்
பெருமைமிகும் புகழ்படைத்த அன்னூர் வாழ்க !
பிறந்த இந்நாள் வாழ்த்திடுவோம் வாழ்க பன்னுள் !

—ஆ. திருஞானசம்பந்தன் IV u c

பொருளெல்லாம் பொருளாகப் போற்றி டாமல்
பொருளெல்லாம் ' சிவபதமே ' என்று வாழ்ந்து
மருளில்லா மனத்ததனுல் மக்கள் தொண்டால்
மானுமின்ப வீட்டுலகைக் காண நிற்கும் ;
இருள்சேர்ந்த நெஞ்சத்தின் இன்னல் தீர்க்கும்
இணையற்ற தமிழ்மொழியைச் சைவம் தன்னை,
அருளோடும் ஓம்புதிருக் காசி வாசி
அருணந்தி மாமுனியே வாழி ! வாழி !!

' பாட்டென்ருல் தேவாரப் பாட்டே ' என்று
பல்லோரும் போற்றிசெயப் பாடிக் காட்டி
நாட்டினிலே நல்லதமிழ் வளர்க்கும் நல்லார் !
நாவல்லார், நல்லறங்கள் காக்கும் நல்லர் !
கேட்டாரைப் பிணித்திடும் நற்பேச்சால் முன்பு
கேளாரும் விரும்பிடவே இனிதாய்ப் பேசும்
பூட்டாமல் உள்ளத்தைத் திறந்து காட்டும்
பொற்பான மாமுனிவர் வாழ்க ! வாழ்க !!

பொங்குதமிழ்ப் பூங்காவில் பூத்துநிற்கும்
பொன்னன நறுமலராம் " திருக்கு றட்கு "
எங்குமுள நல்லுரைகள் எல்லாம் சேர்த்தே
எழிலாக ' உரைக்கோத்து ' என்னும் பேரால்
தங்குதடை யின்றேவரும் வாங்கும் வண்ணம்
தாராள சிந்தையினுல் மலிவில் தந்து
மங்காத தமிழறத்தை வளர்க்கும் நல்லோய் !
மாண்புடனே மாமுனியே வாழி ! வாழி !!

—சி. ம குஞ்சு IV u c

ஏட்டிற் போதிந்தவை நாட்டிற் குறைந்து மறையுமுன்பே
பாட்டைச் சலவைச் சிலையிற் பொறித்துப் படித்தெளியோர்
நாட்டமாய்ச் சைவத் திருமுறை பேணும் நலம்நயந்த
கோட்டம் வழிபடுங் கோவே ! அருணந்தி வாழியவே !

நெடுநீர் மறவி மடிதுயி லுன்குமிந் நானிலத்துக்
கெடுநீரார் காமக் கலனென வெண்ணிக் கெடுத்தகற்றிப்
பொடிநீறு செம்மேனிப் பெம்மானை யேதினம் போற்றுகின்ற
வடிவினும் மாண்பா ரருணந்தி பல்லூழி வாழியவே !

அந்தமி லின்பமே சொந்தமாய்ப் பந்தமில் லார்க்களிக்கும்
செந்தமிழ்ச் சொக்கன் திருநடஞ் செய்யுந் திருமதுரை
புந்தியாந் தாமரை போன்றுபொற் றாமரை நீர்க்கயத்துள்
வந்தணை வைத்த பெருமான் அருணந்தி வாழியவே !

கொச்செல்வம் வைத்துப் புரக்கப் பொருளைக் கொடுத்துமிக
மாச்செல்வ மாகத் திருவாரூர் காஞ்சி மதுரைமுதல்
ஈச்செல்வ மெண்ணி லடங்காது ; தம்பெய ரில்இலங்கும்
பாச்செல்வச் சாலை வழங்கும் அருணந்தி வாழியவே !

உண்டிஇல் பிள்ளைகட்(கு) ஊட்டிடுந் தாய்போ லுயர்நிலையில்
பண்டிநி ரம்பப் படுஞ்சுவை அன்னம் படைத்தறங்கள்
எண்டிசை நீளநீர்ப் பந்தலும் கண்டும் எழிற்றமிழ்தேர்
பண்டிதர்க் காயிரம் வைத்த அருணந்தி வாழியவே !

—சோ. பாலசுப்பிரமணியன் III u c

தங்கத் தமிழோடு தாழாநம் சைவத்தை
எங்கும் பரப்பிவளர் ஏந்தலார் — பொங்குபுகழ்க்
காசியிலே வாசமுளார் ; கண்ணூர் ; அவர்பெருமை
பேசுவனே வாழ்த்திப் பெரிது.

திருநாளெனும் ஒருநாளிது பெரும்பேறினைப் பெறவே,
கருமாங்குயில் கனிதாழ்கிளை களிப்பாகவே உறவே,
வருவோர்களை அழைத்தாமிசை வடித்தேமிக தரவே,
மறப்போரினி உளரோநம 'தருள்நந்தியா' ரருளே !

இறையோனவர் பனசைப்பதி அறுபத்துமேல் வயதை
நிறைவாகவே அடைந்தேகம துளமெங்கணும் மீளிர
நறைபாய்ந்திடும் அவர்தாளிணை நமதேஎன அடைந்து
முறையாகவே தொழுதே இனி முனேவேன்கவி மலரே !

—இ. எதிராசன் II u c

ஆசும் தவத்தினில் காசியில் நீடுவாழ் அன்பரசே !
வீசுமின் பாரி ! திருப்பனந் தாளின் விளங்கொளியே !
மூசுறு வண்டினம் மொய்த்திடும் காவிரி, முத்தமிழ்போல் !
தேசு மிகுந்திடுந் தென்றமிழ் நாட்டில் திகழ்ந்திடுவீர் !

திருமைப் புகழ்நாள் தழைக்க மிகுசீர்த் தவவடிவே
அருமைக் குருமணி அன்பீன் ஆண்ட அருள்பெருகி
மருளும் மனவிருள் மக்கள் தெருளற மன்பதையில்
அருளர சோச்சி அழியாப் புகழுற வாழ்ந்திடுவீர்.

—மு. அரங்கராமாநுசம் IV u c

திருப்பனந் தாளில் விருப்பாய் அமர்ந்து
திருமுறை சைவம் அருங்கல்வி ஆக்கமும்
உறுபசி தன்னோடு ஒவாப் பிணியும்
சேரா தியல்பல அன்ன விடுதிகளும்
உண்ணீர் மனையும் மருத்துவ இல்லமும்
மண்ணவர் வாழ மகிழ்வுடன் தோற்றி
உலகப் பொதுமறை யாவரும் கற்க
அளவிலா நூல்கள் குறைசெலவில் ஈந்து
பொதுமணம் வீசுமவ் வள்ளுவம் வாழ
மதுரைநகர் தன்னிலே கல்வெட்டு நாட்டியும்
காஞ்சி வைகுண்டம் மதுரைநகர் தில்லைமுதல்
செஞ்சொல் தமிழ்ப்பதிகம் விண்ணப்பம் செய்திடவும்
மாணவ உள்ளமெலாம் மாணுற்ற பைந்தமிழைப்
பேணும் வகையில் பரிசில் பலவீந்தும்
இன்னபல செய்கை இனிதின் நிறைவேற
நன்னயமாய் ஐம்பத்து நான்குலட்சம் பொற்காசு

இன்பமுடன் ஈங்தோய் எண்ணிலா வூழிபல
மன்பதையில் வாழ்கவே மாவண் இசையோய்
மூவாப் புகழோடு மேன்மேலும் வாழ்ந்திடுவீர்
பூவுலகில் என்றும் பொலிந்து.

—செ. மா. சம்பந்தம் IV u c

கல்கத்தா, அலகாபாத், டேல்லி, ஆக்ரா,
காசி, அண்ணுமலைநகரம், திருவி தாங்கூர்,
பல்லிடங்கள் கட்டளைகள் பலவும் தோற்றி
பைந்தமிழைக் காத்துவரும் சுவாமி கள்தாம்
ஆயிரத்துத் தொளாயிரத்தின் முன்பு தோன்றி
அறுபதுநல் லாண்டுகள்தாம் நிறைந்து நன்ருய்
ஆய்புகழ்நல் ஆவணியின் மூல நன்னுள்
அருளாலே ஊழிபல வாழி வாழி !

காசிதனில் வீற்றிருக்கும் கடவுள் வாழி !
கருணையுடன் தோண்டுசெய்யும் கடலே வாழி !
ஆசிபல செய்தருளும் அண்ணல் வாழி !
அன்புடனே ஆட்சிசெயும் அருளே வாழி !
பேசிநலோர் உளங்கவரும் பெம்மான் வாழி !
பெருமைபல பெற்றுவரும் பெருமான் வாழி !
காசியுடன் கேதாரம் கண்டோய் வாழி !
கருணையோடு மேன்மேலும் வாழி ! வாழி ! !

—கு. செல்வப்பாப்பா IV u c

ஆண்டு அறுபது ஆம் இதுவரையிலும்
தோண்டுகள் பலவும் கோண்டு புரிந்து
தமிழும் சைவமும் சிறப்புடன் துலங்க
இலக்காய் இருக்கும் இன்னருட் செம்மலே !
கால முழுமையும் சாலநும் வாழ்க்கை !
காசி மடத்தினில் கமழப் பெற்றுச்
சமயநற் சைவச் சாத்திரக் கோள்கை
பாரினில் மக்கள் பயிலவும் போற்றிட

சோதியே ! சுடரே ! சூழொளி விளக்கே !
எனமணி வாசகர் இயம்பிய தற்கே
ஒக்க விளங்கும் உத்தம குருவே !
அறுபத் தோன்றும் ஆண்டின் தோடக்க
வைபவ விழாவினை விரும்பி யேற்றுச்
சேந்தி லாண்டவன் சேவடி யருளால்
சைவமுந் தமிழும் சேர்ந்து
துலங்க இலக்காய் விளங்கி வாழியவே !

—சி. அரங்கநாதன் I u c

இராகம் : ஷண்முகப்பிரியா.] [தாளம் : ஆதி.

எடுப்பு

தந்தருள் நலம் பனசைக் குருமணிக்கு—இறைவா
சேந்தமிழ் சிறந்து வாழச்சிவ சிவ ஒளிபரவத் (தந்)

முடிப்பு

அறம்பல புரிந்து மக்கள் அன்பினால் செங்கோல் ஓச்சும்
திறம்மிக்க அருளரசைத் தேசமே புகழ்ந்து வாழ்த்தும்
வறப்பினும் வண்மை குன்ரு வான்பேரிமயம் போலச்
சிறந்து நீடுழிவாழச் சிந்தையால் வணக்கம் செய்வோம் (தந்)

பூவில் தாமரைபோல பாவில் வேண்பாப் போல
வாவிசூழ் திருப்பனசை அருட்குருமணி என்றும்
பாவிரி புலவோர் நாவில் நின்று நடம் பயிலும்
காவிரி போலப் பலகாலம் இனிது வாழத் (தந்)

—ப. நீலா IV u c

महान अरुलनंदि स्वामिकल

सुनी है महान कुमरगुरुपर की कहानी
जितना है महान दानशील और करुणामूर्ति
उतना ही महान उनका वंशज महान अरुलनंदि
माना है हम को यह बात अचरज की मोती।

करते हैं हिन्दु धर्म का पालन ही नहीं
बढाते हैं विद्या और स्कूल की उन्नति
देते हैं उपकार और उपन्यास भी
देखते हैं कि आज के कुमरगुरुपर वे ही।

जीवन के ध्रुव बनकर फैलाते हैं अमर ज्योति
साबुन बनकर निकालते हैं गंदा खब्ती
जीवन बढाने का वरदान उनका ही
भगवान से मैं माँगती रहती।

V. SAROJA
Assistant Teacher,
Sri Gurugnanasambandar High School,
Dharmapuram.

சிவஞான சித்தியார்

அருளது சத்தி யாகு மரன்றனக் கருணை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன்.

— அருணந்திசிவம்.

श्री-ल-श्री अरुलनन्दी तम्बिरान स्वामिकल के जीवन-चरित्र

पांडिय देश के दक्षिण भाग में तिरुनेलवेली शहर के पास 'अरिनायगिपुर' नाम का एक छोटा गाँव है। वहीं श्री-ल-श्री अरुलनंदि तबिंरान स्वामीजी का जन्म हुआ। आपके बचपन में ही उनकी माँ स्वर्गसिधार गयीं। आपने तिरुनेलवेली हिन्दु कॉलेज में शिक्षा पायी। आप नियम बनाने तथा उसका पालन करने में दक्ष थे।

स्वामीजी ने पहले विश्व-महायुद्धे में सेना में सेवा की थी। आपने तमिल तथा अंग्रेजी दोनों भाषाओंके बड़े धुरंधर पंडित व वक्ता भी हैं। अनेक स्थानों में शैव सिद्धांत तत्व के बारे में भाषण दिये हैं। आज कल भी कर रहे हैं। आपसे छपी सैकडों धर्म ग्रंत तमिल और शैव धर्म में आप के अगाध प्रेम की साक्षी है। ऐसे महान के शकल-सूरत देखते ही लोग मंत्र मुग्ध हो जाते हैं। और शिक्षित तथा आत्मज्ञानी हो जाते हैं। आप बराबर अनेक दान पत्र लिखकर सैकडों धर्म कार्य कर रहे हैं। आपको कलयुग के कर्ण कहें तो अत्युक्ति न होगी। आप पहले राजनैतिक क्षेत्र में सेवा की फिर प्रेम मार्ग को ग्रहण किया और अंत में दया मार्ग को अपनाया।

आप पहले सांसारिक जीवन में लीन रहे, बाद को धर्म मार्ग में चलने का विचार हुआ। ईश्वर के सम्मुख खडे होकर उनकी अनुपम गुणों की स्तुति करने से जो आनंद होगा वही सभी ऐश्वर्य से श्रेष्ट है। ऐसे उत्तम मार्ग पर चलने की सुविधा कैसे मिलेगी? बहुत से दिन इसी चिंता में लीन रहे, अंत में खूब सोच विचार करके तंजाऊर जिला के धर्मपुरम मठ के तेईस्वाँ गुरु महा सन्निधानम श्री-ल-श्री सुब्रमण्य देसिक ज्ञानसंबन्ध परमाचार्य (स्वामिकल) स्वामीजी के शासन काल में धर्मपुरम आकर आपसे ज्ञान दीक्षा पायी।

आप कुछ साल तंबिरान के पद में रहकर धर्म की सेवा की थी। तब आपने जगह जगह जाकर शैव सिद्धांत के बारे में अनेक भाषण देते थे। आपका जीवन धर्म के साथ अद्वैत भाव से मिल गया। आपका विचार था लोगों को बचपन में ही धर्म की शिक्षा दे दें तो वे अधर्म का मार्ग त्याग कर धर्म के मार्ग लेंगे।

तांब्र परणी नदी के उत्तर तट पर 'श्रीवैकुंडम' नामक एक गांव है। उसके नजदीक 'श्रीकैलास' नाम के छोटे गाँव में शैव वेलाल्लर कुल में एक महान पैदा होकर धर्मपुरम के मठातिपति से ज्ञानोपदेश पाकर तिरुपनंदाल में एक मठ की स्थापना की थी। आपका शुभ नाम था श्री-ल-श्री कुमरगुरुपर स्वामीजी उसी परंपरा में उन्नीसवीं पदवी में श्री-ल-श्री काशिवासी स्वासिनाथ तंबिरान स्वामिजी शासन कर रहे थे। आपने श्री अरुलनंदि तंबिरान स्मामीजी को अपने स्थान के योग्य सममाकर बुलवाया और खुशी से अपनी पदवी देकर ईश्वर की सरण ली।

श्री-ल-श्री काशीवासि अरुलनंदी तंबिरान स्वामी जी ने सनू १९४४ मार्च २६ वीं तारीख में शासन पाया। उसी वर्ष अप्रैल महीने में सेंतसिल कल्लूरी नामक एक कालेज खोलकर तमिल में उच्च शिक्षा देने का प्रबंध किया। आपके मठ के अधीन अनेक मठ हरिद्वार, केदार, काशी आदि स्थानों में बसाये गये हैं। आपकी प्रशंसा दक्षिण में ही नहीं बल्कि उत्तरभारत में भी काफी फैली हैं। आपकी चतुराई का वर्णन कैसे हम अपने छोटे मुख से करें?

आपने अगणित धर्म किये हैं। कुंबकोनम, तिरुप्पनंदाल आदि स्थानों में वैद्य शलायें बसायी हैं आप स्कूल तथा कालेजों के विद्यार्थियों को स्पर्धाएँ चलाकर अध्ययन में उनकी उत्साह बढ़ा रहे हैं। उसी तरह देवारम और तिरुवाचकम पढनेवाले विद्यार्थियों

को भी स्पर्धायें चलाकर उनको तमिल के धर्म ग्रंथ पढने में लगन पैदा करते हैं। स्त्रियों को भी धर्म शिक्षा देने का प्रबंध किया है। तिरुक्कालत्ती, कांची आदि जगहो में कण्णप्पर कच्चियप्प-शिवाचार्य्यार जैसे महात्माओ की याद में अन्नदान का बंदोबस्त किया है।

अप्पूदि अडिगल जैसे तिरुनाउक्करसु नायनार के नाम से अप्पर पौसला स्थापित करके चलाते थे। वैसे ही आपने अप्पर पौसला खोला है। ईसी प्रकार सैकडों दान पत्र लिखकर सैकडों जगहों में अनगिनत धर्मकार्य बराबर चलने का सुप्रब्ध किया हैं।

इनके अलावा स्वामिजी सैकडों पुस्तके छपवाकर उनके द्वारा तमिल एवं शैव धर्म की रक्षा कर रहे हैं। आपने कुमर-गुरुबर स्वामी जी प्रबंध तिरट्टु, तिरुवाचकम, तिरुमंदिरम, कंदर-कलिवेण्बा, तिरुक्कुरळ, नीतिनेरि विळक्कम, अभिरामी अंदाति वगैरह कई पुस्तकें छपवायी है। आपने मंदिरो में 'शिव शिव' शब्दों से बिजली की दीपके लगायी हैं।

अब आपकी अवस्था (६०) साठ साल की हुई है। ऐसे सत्गुण सम्पन्न श्री-ल-श्री अरुळनंदि तंबिरान स्वामीजी ईश्वर की कृपा से और कई साल जीवित रहकर लगातार धर्म की सेवा करते रहने के लिये महादेव जी से हम सब तहे दिल से प्रार्थना कर रहे हैं।

—செ. பிச்சாண்டி III u c

உ

குருபாதம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகளின்

61 ஆவது ஆண்டுத் தொடக்கவிழாவன்று வாசித்தளித்த

வாழ்த்துப்பா

திருவளர் பொற்று மரை மலர் மதுரையும்
மருவளர் மலர்மகள் துதிசெயும் கமலையும்
குருவளர் ஞானத் திருவளர் தருமையும்
ஒருநக ராக அரசுவீற் றிருந்தருள்
மாசி லாமணித் தேசிகன் றன்பால்
ஆசிலா அருளுப தேசம் பெற்ற
குமர குருபரன் வழிவரு கோண்டால்!
ஐந்து வயதினில் மூங்கை யகன்று
செந்திற் கந்தன் திருவருள் பெற்றும்
திருமலை நாயக்க மன்னன் போற்றிடத்
திருமலைத் தாய்முத் தாரம் பெற்றும்
மாசிலா மணியாய் மன்னிய குரவனைத்
தூசில் மும்மணிக் கோவையாற் றுதித்தும்
வேளூர் முத்துக் குமரவேள் தன்னை
நாளும் பிள்ளைத் தமிழால் நவின்றும்
ஆசான் அருள்வழிக் காசிக் கேகிப்
பேசா இந்தி கைவரப் பெற்றுச்
சிங்கமீ தேறிப் பாதுஷா கண்டு
க்ங்கைக் கரையினில் மங்காப் புகழுடன்
திருமடம் அமைத்துச் சிவநெறி பரப்பியும்,
சைவ சித்தாந்தச் செந்நெறி நிறுவியும்
பசுபதித் தொண்டினைப் பாங்குடன் இயற்றிய
அமர மாமுனிக் குமர குருபரன்
தமரென வந்து தரணியில் நாளும்
அருளறம் வளர்க்கும் அருணந்தி அண்ணல்!
தருமைக் குரவர் தம்முள் இருபான்
அருமை மூன்றாய் அமைவுறும் ஆசான்

சுப்பிர மணியத் திப்பியப் பெயரோன்
திருவடி சார்ந்து குருவருள் பெற்றுத்
தேசிகற் கட்டளை சிரமேற் கொண்டு
ஆலயக் கட்டளை அமைவுடன் பார்த்து
இருபா னான்காம் குரவர்தம் காலத்
தோரு மாநாடும் ஒருபத் தாண்டு
விழவினை விருப்போடு குறிப்பினில் நடத்திச்
சிறந்த நற்றொண்டு திறம்பெறச் செய்தோய் !
ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்எனும் உரைக்கோர்
இலக்கிய மாக இலங்கிடும் ஏந்தால் !
யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்எனும் உண்மையை
வாழ்க்கையிற் கொண்டு மனத்துற வெய்தியும்
நன்றாகுங் கால் நல்லவாக் காண்பவர்
அன்றாகுங் கால் அல்லற் படுவது
நன்றா காதென நன்குணர்த் துரைத்தும்
பயனில் சொற்களைப் பாராட்டாமல்
நயனுடைச் சொற்களை நாளும் கூறியும்
உற்றார் யார்உளர் உயிர் பிரியுங்கால்
குற்றாலத் துறை கூத்தனல் லால்நமக்
கென்றே நாளும் எடுத்துக் கூறிக்
காலமுண் டாகவே கடவு ளிடத்துக்
காதல் செய்கென்னக் கட்டளை யிட்டும்
பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேன் றனக்குமுன் னருளால்
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும்
ஞானஉரை தனை நாளும் உரைத்து
நீபெறு மின்பம் நின்னைச் சார்ந்த
யானும் பெறவே எழிலாகத் தருமை
இருபா னைந்தாம் எழில் மிகுகுரவன்
சுப்பிரமணிய தேசிகன் றன்பால்
அடியினை ஆற்றுப் படுத்தினை அந்நாள்
படிமிசைப் பாங்குடன் வாழி பல்லாண்டே.

41, உஸ்மான்சாலை,
தியாகராயநகர், சென்னை 17
11—9—59.

வித்துவான், சோமசுந்தரத்தம்பிரான்

தருமபுர ஆதீன அடியார்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான இராஜன்கட்டளை, திருவாரூர்



இராஜன்கட்டளையின் சார்பில் புதிதாகச் செய்யப்பெற்ற நாயன்மார் திருவுருவங்கள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீஸ்வரன்கோயில்

மேல் :- சென்னை மாநில அறநிலைய அமைச்சர் அவர்கள்
மதிய உணவு திட்டத்தைத் தொடங்கிவைத்தல்

கீழ் :- உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்கள் மதிய உணவு அருந்துதல்



தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீவைத்தியநாதசுவாமி
தேவஸ்தானம், வைத்தீஸ்வரன்கோயிலில்

சென்னை மாநில அறநிலைய அமைச்சர்,
கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் கையந்திரத்தால்
அரிசி தயாரிக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தல்

வேளூர் ஸ்ரீ வைத்தீசுவரன்கோயில் உயர்நிலைப்பள்ளிக்கு
தேவஸ்தானச் சார்பில் கட்ட இருக்கும் பிரார்த்தனை மண்டபத்திற்கு
அடிப்படைக்கல் நாட்டுதல்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீஸ்வரன்கோயில்



மேல் :- சென்னை மாநில அறநிலைய அமைச்சர், கனம். திரு, M. பக்தவத்சலம் B. A , B L., அவர்கள் மேலக் கோபுரத்தருகில் அமைக்கப்பெற்றுள்ள குடிதண்ணீர்க்குழாயைத் திறந்துவைத்தல்

கீழ் :- ஷை விழாவைத் தொடங்கி வைத்து உரை நிகழ்த்துதல்



உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில்
இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியுள்ள

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்களின்

61 ஆவது ஜன்ம நட்சத்திரத் திருநாளையொட்டிப்
பணிவுடன் சமர்ப்பித்த

அன்பு மலர்

(ஆவணி மூல நன்னாள்—11–9–59)

அருளும் அன்பும் அணிகலமாகக் கொண்ட வள்ளலே
போற்றி !

உலகம் போற்றும் வகையில், சிவநெறியும் தவநெறியும் ஓங்கப் பற்பல பேரறக்கட்டளைகள் நிறுவி அடியார்களுடைய பெருமையைப் பரப்பிவரும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களுடைய 61-வது ஜன்ம நட்சத்திரத் திருநாளில் அன்புடன் சமர்ப்பிக்கும் இந்த மலரை ஏற்றருள வேண்டுகின்றேன். அன்பும் அருளும் நிறைந்த சுவாமிகளின் திருநாமம் அருளையே முதலாகவுடையது குறித்து இன்புறுகின்றேன்; அன்பு அருள் என்றிவற்றுள் அருள் துறவுடையோர்க்கே சிறப்புடையதாதலும் நூலோர் கொண்ட முடிவு அன்றோ !

ஆவணி மூல நன்னாளில் அவதரித்த பெருமை யுடையோய்
போற்றி .

மதுரைச் சொக்கலிங்கப் பெருமானுக்குரிய பொன்னாளில் அவதரித்த பெருமை வாய்ந்த சுவாமிகள் அவர்கள் ஆவணி மூல நன்னாளில் காசி, சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர்,

திருநள்ளாறு முதலிய தலங்களில் செய்துவரும் அன்னதானங்களும், மற்றத் தருமங்களும் மிகப்பல. திருவிளையாடற் புராணமும், வசனமும் இந்த நன்னாளில் சில ஆண்டுகளுக்கு முன் வெளிவரச் செய்திருப்பது போற்றற்குரியது. குங்கிலியக் கலய நாயனர் திருநட்சத்திரம் ஆவணி மூலத்தன்றே கொண்டாடப் பெறுகின்றது. அவர் பக்தியை வியந்து சிவ பெருமான் நிமிர்ந்து தரிசனம் தந்த தலமாகிய திருப்பனந் தாளிலே காசி மடத்தைச் சிவ ராஜதானியாக அரசு புரியும் இணையற்ற பெருமை சுவாமிகளுக்கே உரியது.

இறைவனிடத்து இடைவிடாது அன்புசெலுத்தும் தனிப்
பெருந் தலைவ போற்றி !

'சிவனெனும் நாமந் தனக்கேயுடைய செம்மேனி எம்மானின்' திருப்புகழைப் பல்லாற்றானும் பரப்பி நாளும் இன்னிசையால் திருமுறைகள் ஓதிப் பேரின்ப மெய்திவரும் சுவாமிகள் சிவஸ்தலங்கள் பலவற்றில் திருமுறைப் பாடல்களைச் சலவைக் கற்களிலே அமைத்த தொண்டின் பெருமையை இயம்ப வல்லேனல்லேன்.

"அவர்களுக்கு உள்ள திருவருள் உறைப்பு, உண்மை, உறுதி, ஊக்கம், ஒழுங்கு, செயற்றிறம் முதலியவற்றைத் தமிழுலகம் நன்கு அறியும். திருமுறைப் பண்ணிசைக்கு என்றே வாய்ந்த தம் இனிய குரலால் நாள்தோறும் அவற்றைப் பாடிப் பாடிச் சிவாநந்தம் நுகர்பவர்கள்" என்று சுவாமிகளைத் தருமை யாதீன மகாசந்நிதானம் அவர்கள் பாராட்டிக் கூறியிருப்பது இங்கே குறிக்கத்தக்கது.

ஈகையில் இன்பங்காணும் பெற்றியோய் போற்றி !

ஈகை யென்பது காசிமடத்தில் காணப்பெறும் தனிச்சிறப்பன்றோ ! சிவநேயர்கள் எவர் வரினும் நல்லுண்டி அளித்து அவர்கட்கு உரிய உதவி புரிந்து வருதல் இன்றும் என்றும் நடைபெறுகிறது. குருபூசா காலங்களிலும், விழாக் காலங்களிலும் புலவர்களுக்கும் தகுதியுடையோர்க்கும் பேராதரவு அளித்து வருவது நித்யமாகவுள்ள காட்சியாகும்.

உள்ளும் புறமும் ஒத்த பண்புடையோய் போற்றி !

சுவாமிகளின் அருங்குணப் பண்புகளை இச் சிறிய ஏட்டில் புனைய இயலாது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் மெய்ப்புகழை நிலைநாட்டிவரும் வகையில் ஆற்றிவரும் அருந்தொண்டுகள் எண்ணிற் பல; எண்ணவொண்ணாததாயினும் எண்ணியெண்ணி இன்புறற்பாலன. குருபக்தியும், சீலமும், தவமும் பூண்ட சுவாமிகளுக்கு இத்தருணத்தில் எனது நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஊக்கமுடனுழைக்கும் தொண்டர்பால் அன்புடையோய்
போற்றி !

கடமையைச் சரிவரச் செய்யும் தொண்டர்களே நாட்டுக்குத் தேவை. காசிமடம் போன்ற தர்ம ஸ்தாபனங்களில் இவ்விதத் தொண்டர்கள் இருத்தல் அவசியம். சிவமணம் கமழும் காசி மடத்திலும் தமிழ் மணம் கமழும் செந்தமிழ்க் கல்லூரியிலும்,, ஸ்ரீவைகுண்டம், மதுரை, திருச்சி, தில்லை, காசி, இராமேசுவரம் முதலிய தலங்களிலும் காசிமடத்துப் பணிகளை ஆற்றிவரும் நற்றொண்டர்கள் ஒருசேர அமைந்திருப்பது சாலவும் பெருமை தருவதாகும். சீலமிகு தலைவர்களாக விளங்கும் சுவாமிகள் அவர்கள், தொண்டர்கட்கு அன்புடன் ஆதரவளித்து அவர்களை ஊக்குவிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

‘ என்ன புண்ணியம் செய்தனம் ’ என்று அகமகிழ்வோய்
போற்றி !

‘ திருவலஞ்சுழிவாணனை வாயாரப்பன்னி யாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே ’ என்று ஒவ்வொருவரும் செயல் முறையில் பணி செய்து இன்புறவேண்டுமென்று அடிக்கடி சுவாமிகள் அவர்கள் அறிவுறுத்துவது நினைவுக்கு வருகின்றது. மேலே குறித்த தேவாரத்திற்கேற்ப எல்லா வகையிலும் அறப்பணிகள் செய்து சிவானந்தக் கடலில் மூழ்கிவரும் சுவாமிகளுக்கு எக்காலத்தும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளது செந்தமிழ்நாடு.

ஏழைகட்கு ஆதரவு காட்டும் அண்ணலே போற்றி !

மாணவர்கட்கு நூல்கள் வழங்கியும், இலவசக் கல்வி புகட்டக் கல்லூரியும் பள்ளிகளும் நிறுவியும், பரிசுகள் அமைத்தும், அன்னதானமும் சொர்ணதானமும் உறைவிடமும் அன்புடன் அளித்தும், காசியாத்திரைக்கு நிதிவழங்கியும், இசை வல்லோர்க்கு ஆதரவளித்தும், வைத்திய நிதிக்கென ஐந்து வகை தருமங்கள் செய்தும், தண்ணீர்ப்பந்தலும், ஸ்நான கட்டங்களும், பசுப்பரிசுகளும், கோசம்வர்த்தன நிதிகளும் நிறுவியும், சுவாமிகள் செய்துவரும் நல்லறங்கள் வானோரும் போற்றக்கூடியவையன்றோ !

ஐம்பெருமன்றத்தும் அன்புடன் அறப்பணி பற்பல
புரிந்தோய் போற்றி !

பொன்னம்பலத்தும் வெள்ளியம்பலத்தும் இணையரு அன்புடன் அற்புதப் பணிகள் பற்பல புரிந்துள்ள சுவாமிகள் அவர்களை மனமார வாழ்த்துகின்றேன். ஒவ்வொரு மன்றத்திலும் தேவாரப் பதிகங்கள் கல்வெட்டு, நித்திய பாராயணத்திற்குரிய சாதனங்கள், சொற்பெருக்கு நிகழ்ச்சிகள், சிவப்பிரகாசம் தரும் காட்சிகள் இவையனைத்தும் செய்வித்த பெருமை சுவாமிகளையே சாரும்.

ஒளிவளர் விளக்கும் ஒலிபெருக்கியும் ஆலயங்களில்
அணிபெறச் செய்தோய் போற்றி !

சுமார் இருபத்தைந்து தலங்களைக் காசிமடத்துச் ‘சிவ சிவ’ ஒளிவளர் விளக்குகள் அணி செய்கின்றன. சிவ சின்னத்தைப் பார்த்தவுடனேயே காசி மடத்துத் தொண்டென யாவரும் மகிழ்ந்து சொல்லுவர். தில்லை, காஞ்சி, மதுரை, காசி, இராமேசுவரம், திருக்குற்றாலம், சென்னை (கபாலீச்சுரம், வள்ளுவராலயம், திருவேட்டீசுவரன்பேட்டை) முதலிய தலங்கள் காசிமடத்து நன்கொடையாக ஒலிபெருக்கிகளைப் பெற்றுள்ளன.

ஓதுவார்தம்மை ஓங்கிடச் செய்த உத்தமரே போற்றி !

திருமுறைக்கெனப் பேரறக்கட்டளைகள் பற்பல நிறுவியதோடன்றித் திருமுறை ஓதும் திருவிழாக்கள் நடத்துவது மற்றொரு

சிறப்பாகும். திருவாரூர், தில்லை, மதுரை, திருக்குற்றாலம், திருவிடைமருதூர் முதலிய தலங்களில் குறிப்பிட்ட முக்கிய நாட்களிலும் விழாக்காலத்திலும் திருமுறை வாணர்கள் இன்னிசையுடன் ஓதும் பணிபுரிய ஆவன செய்திருப்பது இன்புறற்பாலது. ஓதுவார்கள் நிலையை ஓங்கிடச் செய்த பெருமை சுவாமிகளுக்கே உரியது.

திருமுறைகளும் பிற சிறப்புறு நூல்களும் அச்சிட்டு ஈந்த
அருளாளா போற்றி!

பனசையில் போய்யாக்குளத்தில் ஆலயங்கட்டி ஸ்ரீகாசி விநாயகரைப் பிரதிஷ்டை செய்த சுவாமிகள் அவர்கள் தத்துவம் நிறைந்த விநாயகரகவலையும், திருமுறை நூல்களனைத்தையும் குமரகுருபரர் பிரபந்தங்களையும், திருக்குறளையும், தல சம்பந்தமான எண்ணிறந்த நூல்களையும் ஆண்டுதோறும், சைவ மக்களன்றி எந்நாட்டவரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் அச்சிடச்செய்து எளிதில் யாவரும் பெறுமாறு செய்து வரும் தொண்டின் சிறப்பு போற்றத்தக்கது.

இவ்விதம் நானில மக்கள் யாவரும் போற்றும் வகையில் 52 லக்ஷத்திற்குரிய 281 பேரறக்கட்டளைகளை நிறுவியுள்ள சுவாமிகள் அவர்கள் காசி மடத்தில் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு அருளாட்சி புரிந்துகொண்டு விளங்கவேண்டுமென்று ஸ்ரீ செந்திலாண்டவர் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

சுபம்.

இங்ஙனம்
க. சுப்பிரமணியன்

தியாகராச விலாசம்
சென்னை

உ

திருக்கயிலாய யாத்திரை செய்து மீண்ட
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்

26-8-59 ஸ்ரீகாசி குமாரசாமிமடத்துக்கு எழுந்தருளியபோது அளித்த

வரவேற்புரை

இமயம் கடந்த எழிலோய் !

திருக்கயிலாய தரிசனம் காணவேண்டி வேனிலும் தண்மையாம் என வேங்குளிர் மிக்க எல்லைகடந்த இமயம் சேன்று மீண்டு முதன்முதலாகக் கங்கைக்கரையில் காசியம்பதியில் கேதாரீசுவரர் திருவருள் பேற்ற தவத்தான் மிக்க குமர குருபரர் தங்கிவாழ் ஸ்ரீகுமாரசாமி மடத்திற்கு எழுந்தருளி எளிய காட்சி வழங்கி கயிலாயநாதன் அருட்பெருக்கில் எங்களையும் திளைக்கச்செய்யும் மகாசந்நிதானமவர்கட்கு எங்கள் மாறிலா மகிழ்ச்சியைத் தேரிவித்துக்கோள்கிறோம்.

கயிலையைக் கண்ட கடவுள் மணியே !

கயிலையைச் சேன்றடைந்து தரிசிப்பது சமயாசாரியர்கட்கும் அருமையுடைத்தாயிருந்தது. பிள்ளைப் பிராயத்திலேயே சிவ ஞானப்பாலுண்டு உணர்வரிய மேய்ஞ்ஞானம் கைவரப்பேற்ற தவமுதல்வர் சம்பந்தர் காளத்தியிலிருந்தன்றோ கயிலைக் காட்சியைக் கண்டார். கற்றுணைபூட்டிக் கடலிற் பாய்ச்சினும் கற்றுணையாவது நமச்சிவாய என்று உறுதிபூண்டு சோல்லுக்கு உறுதி அப்பர் என்ற புகழ்பேற்ற அப்பரடிகளோ ",ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கோண்டு மீளேன்' என்ற உறுதி மோழி தளர்ந்து கயிலைக்காட்சி காண ஐயாறன்றோ அடையவேண்டி வந்தது. அவ்வளவு

அருமையுடைத்தான அத்தரிசனம் இன்று மகாசந்நிதானம் அவர்கட்கு மிக்க எளிதாகக் கிடைத்திருப்பதை எண்ணி இறும்பூ தெய்துகின்றோம்.

பரம்பரை விளங்க வந்த பண்புடையோய்!

பரஞ்சோதி முனிவர் அன்று இற்றைக்கு ஏழு நூற்றாண்டு கட்கு முன்னர் அருள்பாலித்து வளர்ந்த இக் கயிலாயபரம் பரையைப்பற்றி நூலறிவு வாயிலாய் உணர்ந்து கனவுகண்டு கொண்டிருந்த நாம் இன்று 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி எவ்வித இடையூற்றையும் பொருட்படுத்தாது கயிலைக்கு நேரிற் சென்று தரிசித்து அக்கனவை நனவாக்கிய சாதனையைக் காணும் நாம் கயிலாய பரம்பரையின் உண்மையை உணர்கின்றோம். இன்று கயிலாயபரம்பரை ஆதீனம் தருமையே! பெருமை மிக்கது தருமைச் சொக்கலிங்கமே! மாசிலாமணி எங்கள் குருமணியே! என வாழ்த்துகிறோம்.

அம்மையின் அருள்பெற்ற அண்ணலே!

பராசக்தியின் பரிபூரண அருள்வழி நின்று இயங்கும் மகா சந்நிதானமவர்கள் மாயநாட்டை விட்டு வெளியேறி தாயுடன் சென்று பின் தாதையை நண்ணி உயிர்களனைத்திலும் கலந்து ஒளிரும் அவன் உண்மை நிலையினை, வேற்றாகி விண்ணாகி நிறைந்துள்ள திருவருளின் பெருமையை அனுபூதியால் உணர்ந்து கயிலைக்காட்சியைக் கண்டு, ஆனந்தக் கண்ணீர் மார்பாரப் பொழியநின்று சத்தியும் சிவமுமாகப் பன்மையோனிகள் யாவையும் பயில்வன கண்ட காட்சியை நாங்கள் மனக்கண்ணில் கண்டு மகிழ்கின்றோம். வாழ்க! திருக்கயிலாய பரம்பரை, வாழ்க தருமை ஆதீனம்! வாழ்க குருமணி!

வாரணாசி
26—8—59

வி. கலியாணசுந்தரம்,
ஏஜண்ட், குமாரசாமிமடம்.

உ

சிவமயம்

கயிலைக்காட்சி கண்டே மீண்ட, குயிலார் தருமைக்குருவே வருக!

சைவமும், தமிழும் தழைத்து இனிது ஓங்க அருட் சேங்கோல் சேலுத்தி வரும் அறவரசாம் துறவரசே :-

அன்று அறிந்தோம், படித்தோம், கேட்டோம் அன்பே உருவாகிய அப்பர் பெருமான் கயிலைக்காட்சியைக் கண்டாரென்று.

இன்று கயிலைக்காட்சியைக் கண்டு தரிசித்து மீண்டு எழுந்தருளும் தங்கள் திருவோலக்கக் காட்சியைக் கண்குளிரக் காண்கின்றோம்.

திருக்கயிலாய பரம்பரையில் வந்த ஞான குருமூர்த்திகளிலே தாங்களும் ஒரு ஞானமூர்த்தி என்று சோல்லப்படுகிற பேருண்மையையும் பெரும்புகழையும் இன்றைய உலகத்திற்கும் மெய்ப்பிப்பான் வேண்டி மேற்கோண்ட இவ்வரிய பெரிய யாத்திரையை திருவாலவாயுடைய சேந்தமிழ்ச் சோக்கர் திருவருளாலே இனிது நிறைவேற்றி எழுந்தருளும் தங்களை வரவேற்கும் பேறு பெற்றமைக்குப் பேரிதும் மகிழ்கின்றோம்; மகிழ்கின்றோம்.

இங்ஙனம்,

தங்கள்,

மாயூரம்,
உ—௭—59. } நகராட்சி உயர்நிலைப்பள்ளி ஆசிரியரும் மாணவரும்

உ

சிவமயம்

தருமபுர ஆதீனம் என்ற பெயருக்கேற்பத் தருமத்தைத் தழைக்கச்செய்யும் வள்ளலே! தெய்வ நெறியும் பக்தியும் உலக மெங்கும் உண்டாக அருட்பணி செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களே! நமது தென்னகத்தார் கேட்டும், கண்டும் அறியாத திருக்கேதாரம், பசுபதிநாத், அமரநாத், திருக் கயிலாயம் முதலிய மகா புண்ணிய க்ஷேத்திரங்கட்கு அஞ்சா ஹிருதயத்துடன் சென்றுவந்த மகா சந்நிதானம் அவர்களே! தாங்கள் செய்துவரும் சிவபுண்ணியச் செயல்கள் (மன்னன் செய்வது மக்களுக்குண்டாதல்போல்) தங்கள் ஆதரவிலுள்ள எல்லோருக்கும் கிடைக்கச்செய்கிற உத்தம சீலரே! தாங்கள் கயிலாயநாதர் அருளால் தீர்க்காயுளுடனும், திடகாத்திரத் துடனும் இறைபணி செய்துவர எல்லாம்வல்ல கயிலாய நாதரைப் பிரார்த்திக்கின்றோம்.

காளியாகுடி

மாயூரம், } K. V. ஸ்ரீநிவாஸய்யர் சகோதரர்கள்.
உ—௯—'59. }

போற்றித் திருத்தாண்டகம்

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

— அப்பர்.

தினத்தாள்களில்

" தருமபுர ஆதீனகர்த்தர் சேவை "

பொதுக்கூட்டத்தில் பாராட்டு

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த பொது தீக்ஷிதர்கள் ஏற்பாட்டின் மீது ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.

ஸ்ரீ கே. எஸ். கல்யாணசாமி தீட்சதர் தலைமை வகித்தார். கைலாசத்திற்கு திவ்ய யாத்திரை சென்றுள்ள தருமபுரம் ஆதீன கர்த்தர் வேற்றிகரமாக யாத்திரையை முடிப்பதற்காகவும் க்ஷேமமாக ஊர் திரும்புவதற்காகவும் பிரார்த்தனை நடத்தப் பட்டது.

அண்ணாமலை சர்வகலாசாலை உபஅத்தியட்சகர் ஸ்ரீ டி. எம். நாராயணசாமி பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலாகா தலைவரான புரோபஸர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தமிழ் ஆராய்ச்சி இலாகா தலைவரான புரோபஸர் ஜி. சுப்பிர மணிய பிள்ளை, புரோபஸர் ராமநாதன் செட்டியார் ஆகியோர் அவ்வமயம் பேசினர். தருமபுரம் ஆதீனகர்த்தர் ஹிந்து மதத் திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் செய்துள்ள மகத்தான சேவையைப் பாராட்டியும் பேசினர்.

காண்ட்ராக்டர் ஸ்ரீ சபாபதி பிள்ளை நன்றி கூறினார்.

—தினமணி, 2—9—59.

" தருமபுர ஆதீன மகாசந்நிதானம் "

மாயூரத்தில் மரியாதை

தருமை ஆதீனம் குருமகா சந்நிதானத்திற்கு இன்று மாலை மாயூர நகர் எல்லையில் வரவேற்பளிக்கப்பட்டது. நகர பிரமுகர் கள் போதுமக்கள் ஏராளமான பெண்கள், குழந்தைகள் சகிதம் கூடியிருந்தார்கள். குருமகாசந்நிதானம் எல்லையில் வந்தவுடன் மரியாதை வேட்டு போடப்பட்டது. வீதியில் நகர எல்லையி லிருந்து போதுமக்கள் இருமருங்கிலும் பல ஆயிரக்கணக்காகத்

திரண்டிருந்தார்கள். அவரைத் தரிசிக்க மாலை 2 மணி முதல் வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் காத்து நின்றனர். பக்த சிரோமணிகளால் நகர எல்லையிலிருந்து தருமபுர ஆதீனம் மடாலயம் வரை தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. சில இடங்களில் 'கயிலை சென்ற குருமணியே வருக, வருக,' 'சிவத்தல யாத்திரை கண்ட குருமணியே வருக, வருக' என்றும் பொறிக்கப்பட்டிருந்த வளைவுகள் அமைக்கப் பட்டிருந்தன. நீண்ட யாத்திரை செய்து வரும் குருமகா சந்நிதானம் பொதுமக்களுக்கு ஆங்காங்கு நின்று நல்லாசி கூறியும் விபூதி பிரசாதம் அளித்தும் அருட்தரிசனம் தந்தும் சென்றார்கள்.

—தினமணி, 3—9—59.

"தருமபுர மகாசந்நிதானம் அவர்களுக்கு"

மகோன்னத வரவேற்பு

திபேத்திலுள்ள புனித மகா கைலாசத்துக்கு யாத்திரை சென்றிருந்த தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 2—9—59ல் யாத்திரையை வெற்றிகரமாக முடித் துக்கொண்டு திரும்புகையில் மாயூரம் மகாஜனங்கள் அமோக மகோன்னதமான வரவேற்பளித்தார்கள். தேசீய தலைவர்கள் காந்தீஜீ நேருஜீ முதலிய தலைவர்கள் விஜயம் செய்தபோது மக்கள் உற்சாகமாக வரவேற்பளித்தது போல் பல்லாயிரக் கணக்கான மக்கள் ரஸ்தாக்களின் இருபக்கங்களிலும் வீடு களின் கூறைகளின் பேரிலும், மரங்கள், கோபுரங்கள்பேரிலும் கைகூப்பிய வண்ணம் நின்றுகொண்டு ஆரவாரங்கள் செய்து கொண்டு வரவேற்றார்கள். பல மைல்கள் வரவேற்பு ஆர்ச்சுகள் போடப்பட்டு நகரசபை, வியாபாரிகள் சங்கம் முதலிய பல இடங்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை பூர்ண கும்பங்களுடன் வரவேற்று மிகவும் கஷ்டங்களிடையே தைர்ய மாகவே துணிந்து யாத்திரை சென்று வெற்றிகரமாகத் திரும்பி யுள்ளதை பாராட்டித் தங்கள் அன்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டார்கள்.

—சுதேசமித்திரன், 6—9—59.

"தருமபுர ஆதீனகர்த்தர் சென்னை திரும்பினார்"

கைலாச யாத்திரை பூர்த்தி

தர்மபுரம் மடாலய ஆதீனகர்த்தர் கைலாஸமலை யாத்திரையை முடித்துக்கொண்டு இன்று காலை சென்னை திரும்பினார்

சென்ட்ரல் ஸ்டேஷனில் அவரை நீதிபதி ஸ்ரீ என். சோமசுந்தரம், நீதிபதி ஸ்ரீ சுப்ரமண்ய நாடார், ஸ்ரீ வி. ரத்ன முதலியார், ஸ்ரீ என். முருகேச முதலியார், ஸ்ரீ எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன், ஸ்ரீ என். சங்கரன், ஸ்ரீ டி. புருஷோத்தம், எம். எல். ஸி. மற்றும் திரளான பக்த கோடிகள் வரவேற்றனர். மகாசந்நிதானத்துக்கு ஏராளமான மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் தியாகராயநகரிலுள்ள தர்மபுர ஆதீனபிரசாரநிலையத்தில் கூடியிருந்த அனைவருக்கும் ஆதீன கர்த்தர் தாம் கைலாச மலையிலிருந்தும் காசியிலிருந்தும் கொண்டுவந்திருந்த விபூதிப் பிரசாதத்தை வழங்கினார்கள்.

கைலாசமலை யாத்திரை மிகவும் கடினமானது என்றும், கடவுளிடம் திடமான நம்பிக்கையும் மன உறுதியும் இல்லாதவர்கள் அந்த யாத்திரையை வெற்றிகரமாக முடிப்பது அசாத்தியம் என்றும் மகாசந்நிதானம் கூறினார்கள். கைலாச தரிசனம் உன்னதமான ஆத்மீக உணர்ச்சியை ஏற்படுத்துகிறது என்றும் அதை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது என்றும் குறிப்பிட்டார்கள்.

— தினமணி, 4—9—59.

*திருவேற்காட்டுத் தல வரலாறு

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

" மூரல் வெண்மதி சூடு முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடுநினைந்தவர்
சேர்வர் சேய்கழல் திண்ணமே " — சம்பந்தர்.

திருவேற்காடு என்னும் தலம் தொண்டை நன்னாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் சென்னைக்கு மேற்கே பூவிருந்த வல்லியிலிருந்து மூன்றுகல் தொலைவில் காடுவேட்டியாறு என வழங்கும் பழைய பாலாற்றின் வடகரையில் அமைந்து விளங்கு கிறது. வடவேதாரண்யம் எனவும் வழங்கப்பெறுகிறது. இவ் வூரில் தல விருட்சம் வெள்வேல மரமாகும். இதனால் இவ்வூர் திருவேற்காடு என அழைக்கப் பெறுகிறது. இறைவன் தான் மேற்கொள்ளும் உருவங்களுக்கு ஏற்ப வேதங்களும் உரு எடுக்கும்படி கட்டளை இட்டிருந்தார். அதன்படி இவ் வேதங்கள் திரிபுர தகன காலத்தில் நான்கு குதிரைகளாயின. அருச்சுனன் பொருட்டு ஆண்டவன் வேட உருவம்கொண்டபோது நாய்கள் ஆயின. அம்பலத்தில் ஆனந்தத்தாண்டவம் ஆடிய பொழுது காற்சிலம்புகள் ஆயின. பிட்சாடன கோலம் கொண்ட பொழுது கோவணமாயின. இத் தலத்தில் வேதங்கள் வேலமரமாக இறைவன் சிவலிங்க வடிவமாக விளங்குகிறான். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான மூர்க்கநாயனார் அவதரித்த சிறப்புடையது. இந்நாயனாருடைய திருவுருவம் துவாரபாலக ருக்கு வடபால் அமைந்துளது. அகத்தியருக்கு மணக்கோல தரிசனம் கொடுத்தருளிய பெருமையுடையது.

மணக்கோலம் கொண்ட பார்வதி பரமேசுவரர் உருவம் மூலத்தானத்திற்குப் பின்பால் அமைந்துளது. திருவேற்காட்டுப் பாலாம்பிகையையும் திருவலிதாயம் ஜகதாம்பிகையையும், திரு வொற்றியூர் வடிவாம்பிகையையும் ஒரே நாளில் வழிபடுபவர்கள் இம்மையிலும் மறுமையிலும் எல்லா நலன்களும் பெறுவர். இன்றும் விஷம் தீண்டாத பெருமையுடைய தலம் இது. விநாயகர்

முருகப்பெருமான் திருமால், பிரமன் இந்திரன் முதலியோர் இத் தலத்தில் பூசித்துப் பேறு பெற்றனர். இந்திரன் பூசித்துப் பேறு பெற்றமையை அறிந்த அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய ஏழு திக்குப்பாலகர்களும் வேதநாயகனைப் பூசித்துப் பேறு பெற்றனர். இந்திரன் பூசித்த கோயில் வேற்காட்டுநாதர் கோயிலுக்குக் கீழ்த்திசையில் வேள்ளிக்கோல்லையில் தனிக் கோயிலாக அமைந்துளது. இத் தலத்தில் உள்ள வேததீர்த்தத்தில் ஞாயிறு தோறும் நீராடி வந்தால் அங்கம் குறைந்த பெருநோயாளர் நோய் நீங்கி நலம் பெறுவர். இத்தலம் திருஞான சம்பந்தரின் தேவாரப்பாடல் பெற்ற சிறப்புடையது. இத்திருக்கோயில் சோழ அரசனால் கட்டப்பெற்றது. கிரந்த எழுத்துக்களில் அமைந்த கல்வெட்டுக் கள் சிலவற்றைக் இக்கோயிலில் காணலாம். இறைவர் திருநாமம் வேற்காட்டீஸ்வரர். இறைவி திருநாமம் வேற்கண்ணி அம்மை.

"விண்ட மாம்பொழில் சூழ்திரு வேற்காடு
கண்டு நம்பன் கழல் பேணிச்
சண்பை ஞானசம் பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே."
— சம்பந்தர்,

நவமணிமாலை

வித்துவான், திரு. ப. இராமநாதபிள்ளை, தமிழாசிரியர், மன்னார்குடி.

இராகம் - கல்யாணி   தாளம் - ரூபகம்

பல்லவி

தஞ்சத் தாமரைப் பாதமே தருவாய் — உன்
தஞ்சத் தாமரைப் பாதமே தருவாய் — தாயே

அநுபல்லவி

மஞ்சனனவனை மறந்திருத்தல் உண்டோ
அஞ்சலீ செய்தவர்க்கே — அருள்செய வேண்டாவோ
(தஞ்சத்)

சரணம்

கஞ்சமா மலரான் கைதொழுதேத் திடுவான்
பஞ்சப் பிணி மரணம் — பயத்தை யொழித்திடுவாய்
செஞ்சொற் புலவர் பலர் சேருந் தருமபுரம்
மஞ்சொத் தருள் செய்யும் — மாலக்ஷ்மிதுர்க்கையே. (தஞ்சத்)

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

(மலர் 18 இதழ் 9 பக்கம் 545 இன் தொடர்ச்சி)

பாம்பு மணி உமிழ்தல்

ஒரு நல்ல பாம்பு இரவில் இரைதேடச் செல்கின்றது இருள் நீங்குமாறு தன் மாணிக்க மணியை உமிழ்ந்துவிட்டு நெடுந்தொலைவு சென்றுவிடுகின்றது. அங்குக் காந்தள் மலரில் ஒரு தும்பியைக்கண்டு தன் மணிதானோ என்று மருண்டு நோக்குகின்றதாம். இதனை ;

" கூரிருள் திருமணி யுமிழ்ந்த நாகம் காந்தள்
கொழுமடல் புதுப்பூ ஊதும் தும்பி
நன்னிறம் மருளும் "

(அகநா-138)

என எழுப்பன்றி நாகன் குமரனார் என்ற புலவர் கூறியிருத்தல் காண்க. மணியுமிழ்ந்த பாம்பு அம்மணியை இழந்ததாயின் மிகவும் வருந்தும் என்பதை :

" மேய்மணி யிழந்த பாம்பின் நீநனி
தேம்பின் வாழியென் னெஞ்சே " (அகநா-372)

எனப் பரணர், அல்லகுறிப்பட்ட தலைமகன் கூற்றாகக் கூறியிருத்தல் காண்க. தலைவியைக் குறியிடத்தில் காணாமையாலாய நெஞ்சின் வருத்தம், உமிழ்ந்த மணியைக் காணாத பாம்பின் வருத்தம் போன்றது என்க. மேய்தற்கு உமிழ்ந்த மணியை மேய்மணி என்றார். பாம்பு உமிழ்ந்த மணியின் ஒளி இரவில் பிறவுயிர்கட்கும் உதவியாதல் உண்டு. பெரிய கோபத்தை யுடைய ஒருபுலி பெரிய களிற்றினைக் கொல்கின்றது. கொன்ற களிற்றை இழுத்துக்கொண்டு தன் பிணவிற்குக் கொடுக்க எண்ணி இருளில் வழியறியாது விழிக்கின்றது. அங்கு அஞ்சத் தக்கதொரு பாம்பு ஒளி வீசுமாறு மணியை உமிழ்ந்துவிட்டு

மேயத் தோடங்குகிறது. அப்பாம்பினுல் உளதாகும் தீங்கினேயும் நினேயாது தன் பிணேமேல் உள்ள காதல் மிகுதியால் அம்மணி ஒளியில் வழிகண்டு அக்களிற்றின் தசை புலருமாறு இழுத்துச் சேல்கின்றதாம். இதனே எருமை வேளியனுர் மகனுர் கடலனுர் என்ற புலவர் நமக்கு அறிவிக்கின்ருர்.

> '' இருங்களிறட்ட பேருஞ்சின உழுவை
> நாமநல்லராக் கதிர்பட உமிழ்ந்த
> மேய்மணி விளக்கில் புலர வீர்க்கும் '' (அகநா-72)

என்று கூறியுள்ளமை காண்க. மணி உமிழ்வது நல்ல பாம்பே என்பதை 'நல்லராக் கதிர்பட உமிழ்ந்த மேய்மணி' என்பதால் அறியலாம்.

இரவுக் குறியில் தலேவியைக் கண்ணுற்று நீங்கும் தலே வனிடத்துப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் வரைவு கடாவு கின்ற தோழியின் கூற்ருக, மதுரைப் பாலாசிரியர் நற்ருமனுர் என்னும் நலமிகு புலவர்,

> '' உருமுச் சிவந்தேறிந்த உரனழி பாம்பின்
> திருமணி விளக்கிற் பேறுகுவை
> இருண்மேன் கூந்த லேமுறு துயிலே '' (அகநா-92)

என்று கூறியுள்ளார். பகலாயினும் மந்தியும் அறியா மரங்கள் சேறிந்து இருண்டு இருத்தலால் 'திருமணி விளக்கிற் பேறுகுவை' என்ருர். இடியேற்ருல் இறந்துபட்ட பாம்பின் மணியாதலின் பகலினும் கிடந்தாங்கே கிடந்து ஒளிவீசுவ தாயிற்று. இம்மணி காதலர்க்கு மணிவிளக்காய் உதவிசேய்தது என்பது இதனுல் அறியலாம். இவ்வாறு புலிக்கும் காதலர்க்கும் உதவியாக இருக்கும் இப்பாம்பு உமிழ்மணி ஒரு சிறுகுடியில் தேருவிற்கே பேருவிளக்காய் ஒளிவீசுகின்றதாம்.

> '' அருவிதந்த அரவுமிழ் திருமணி
> பேருவரைச் சிறுகுடி மறுகுவிளக் குறுத்தலின்
> இரவு மிழந்தனள் அளியள்...நின்மார்பே ''
>
> (அகநா-192)

எனப் போதும்பில் கிழான் வேண்கண்ணனுர் என்ற புலவர் கூறி யிருத்தல் காண்க. இது இரவுக்குறி மறுத்த தோழியின் கூற்று.

மலையருவி கோணர்ந்து ஒதுக்கிய நாகமணியின் பேரொளி சிறு குடியின் தெருவெல்லாம் ஒளி வீசுதலால் பிறர்அறிய நேரும் ஆதலின் இரவிலும் நின்மார்பை இழந்தவளானாள் எனத் தலைவனுக்குக் கூறுகின்றாள் தோழி.

பாம்பின் தோல்

பாம்பு தன் தோலை தானே உரித்துக்கொள்ளும் இயல் பினது. ஓர் உயர்ந்த புற்றின்மேல் பாம்பு உரித்ததோல் கிடந்து ஓங்கி அசைகின்றது. அது புற்றின் மேலிருந்து அசையும் தோற்றம். உயர்ந்த சிவந்த மலையில் இருந்து விழும் அருவி நீரை ஒத்திருக்கின்றதாம். இதனை மருங்கூர்ப் பாகைச் சாத்தன் பூதனார்,

" செவ்வரைக் கொழிநீர் கடுப்ப அரவின்
அவ்வரி உரிவை அணவரும் மருங்கின் " (அகநா-327)

என்று உணர்த்துகின்றார். செம்புற்றுச் செவ்வரை போலவும், பாம்பின்தோல் அருவிநீர் போலவும் காணப்படுகின்றன. இப் பாம்பின் தோல் மென்மையாக வரிவரியாக இருத்தலின் இதன் அசைவிற்கும் பாலை நிலத்தில் வேனில் வெப்பத்தில் தோன்றும் பேய்த்தேரின் அசைவிற்கும் உள்ள ஒப்புமை கருதிச் சீத்தலைச் சாத்தனார்,

" பாம்பின் உரி நிமிர்ந்தன்ன உருப்பவிர் அமையத்து "
(குறுந்-154)

என்று கூறியுள்ளார். உரி-தோல். உருப்பு-வெப்பம்; ஈண்டுக் கானல் தேரையுணர்த்திற்று. பாம்பின் தோல் வெண்மையாக வும் மென்மையாகவும் இருப்பதால் மெல்லிய நல்ல ஆடைக்கு உவமையாகக் கூறுவதுமுண்டு.

" பாம்புரி யன்ன வடிவின...கலிங்கம் " (புறநா-383)
" பாம்புரித் தன்ன வான்பூங் கலிங்கம் " (புறநா-392)
" அரவுரியன்ன அறுவை " (பொருநராற்றுப்)

என்பன காண்க.

3. பச்சைப் பாம்பு

பாம்புகளில் பச்சை நிறமுள்ள பாம்பும் உண்டு. திரண்ட கரும்பின் பூ விரியாது தோட்டுடன் கூம்பியுள்ள நிலைக்கு உவமையாகப் பச்சைப் பாம்பின் சூல் முதிர்ச்சியை உவமை கூறியுள்ளார் கழார்க்கீரன் எயிற்றியார் என்னும் புலவர்.

" சினைப் பசும் பாம்பின் சூல் முதிர்ப்பன்ன
கனைத்த கரும்பின் கூம்பு " (குறுந்-35)

என்பது காண்க. சூல்-கருப்பம். கனைத்தல்-திரளுதல். கரும்பின் பூக்குலை வெளித்தோன்றுது தோடு மூடியுள்ள நிலைமையினையே இங்குக் கூம்பு என்றார். அக்கூம்பிற்குப் பசும்பாம்பின் சூல் முதிர்ந்த வயிறு தக்க உவமையாதல் காண்க. இதுகாறும் கூறியவாற்றால் சங்க காலப் புலவர்கள் மலைப்பாம்பு, நல்ல பாம்பு பசும்பாம்பு இவற்றின் இயல்புகளை எவ்வளவு நுணுகி நோக்கிக் கூறியுள்ளார்கள் என்பது விளங்கலாம்.

4. உடும்பு

இது பரற்கற்கள் நிறைந்த பாலைவனத்தில் தவழ்ந்து செல்லும் தன்மையது என்பதை இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார் கூறியுள்ளார்.

" பரற் றவழ் உடும்பின் கோடுந்தா ளேற்றை "
(மலைபடுகடாம் 508, 509)

என்றது காண்க. இந்த ஒரு அடியில் உடும்பு வாழும் இடம் பரல்நிறைந்த காடு என்பதும், அது தவழ்ந்து செல்லும் நடையையுடையது என்பதும் அந்நடைக்கு ஏற்ப வளைந்தமைந்த கால்களை யுடையது என்பதும் விளக்கப்பட்டிருக்கும் திறம் காண்க. இவ்வுடும்பின் முகத்தை உழுகின்ற கொழுவிற்கு உவமை கூறியுள்ளார் கடியலூர் உருத்திரங் கண்ணனார்:

" உடும்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றி "
(பெரும்பாண்-200)

என்றது காண்க. இதனால் உடும்பின் முக அமைப்பை உணரலாம்.

வன்பரணர் என்னும் புலவர் வல்வில் ஓரி என்ற வள்ளலின் வில்லாற்றலை எடுத்துரைக்கும்போழுது இவ்வுடும்பைக் குறிப்பிட்டிருக்கின்றார். ஓரி, யானையை எய்த சிறந்த அம்பு அவ்யானையை வீழ்த்திவிட்டு அமையாது பெரிய வாயினையுடைய புலியைக் கொன்றதாம்; அதன்பின் துள்ளியோடும் புள்ளிமானை யுருட்டியதாம்; அதன்பின் உரல்போன்ற தலையையுடைய காட்டுப் பன்றியை வீழ்த்தியதாம். அதன்பின்னர் சூழ்ந்துள்ள புற்றில் இருந்த உடும்பின் உடம்பில் தைத்ததாம்.

தமிழின்பின் சென்றதிருவிளையாடல்

செஞ்சோற்கோண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர்,
தமிழ்ப்பேராசிரியர் ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

காட்சி 3

இடம் - தமிழ்ச்சங்கம்

உறுப்பினர் - புலவர்கள், உருத்திரசன்மர்.

[புலவர்கள் பாடப்பாட உருத்திரசன்மர் சிலர் பாடல்கட்குக் கண்ணீர் விட்டும் சிலர் கவிகட்கு முகமசைத்தும், தலையசைத்தும் பாராட்டுதல்]

கபி : என்னே பேதைமை! ஒற்றுமையாய் இருக்கவேண்டிய புலவர் கூட்டத்திலே போட்டியும் பொருமையும் எப்படிப் புகுந்தன ? தமிழ் நாட்டுப் புலவர் உலகம் பூந்தோட்டம்; போதியமலைச் சாரல்; அங்கே மதுநுகரும் வண்டு உண்டு; போராடும் மனம் இல்லை. ஒலித்து வீழ்ந்து கால்வாய்கள் ஒன்ருகி உருண்டோடும் அருவி உண்டு ; உலகை அழிக்கும் வெள்ளப் பெருக்கு இல்லை. சங்கப் புலவர்களே! நாம் தங்கப் புலவர்கள். சேக்கர்வார் சடைச் சோக்க நாயகன் சேவடிக் கீழ் நாம் பண்டுபோல் ஒற்றுமையாய் வாழ்வோமாக! இடையே நம் இதய அழுக்கால், ஆணவத்தால், தன் முனைப்பால் போட்டி எழுந்தது; அழுக்காறு அரும்பியது! அதன் விளைவு ஒன்றுபட்ட புலவரினம் உருக்குலைந்தது; கட்டுக் கோப்பான கவியுலகு தளர்ந்தது. ஆனுல் நமது ஆணவத்தின் முனைப்பை அடக்கி அறிவுக்கு ஓர் அழகுப் பாதை அமைத்துச் சேந்தமிழ்ச் சோக்கர் திருவருள் திருப்பி யிருக்கிறது; இனி நாம் இணையற்றவர்கள்; உலகமே திரண்டாலும் நம் ஒற்றுமை குலையாது! வாழ்க புலவர் உலகம்!

அனைவரும் : வாழ்க! வாழ்க!

கபி: நம் சங்கப் பலகை யாரோ ஓர் சான்றோர் வருகைக்கு நீண்டிருக்கிறதே? அவ்வுத்தமர் யார்? அதோ இடைக் காடனர்! வருக! இடைக்காடனரே! வருக!

அனைவரும்: புலவர்மணியே! வருக!

இடைக்: வணக்கம் வண்டமிழ்ப் புலவர்களே! பிணக் கிருந்த நெஞ்சில் பேரொளி ததும்பித் திருவீற்றிருக்கும் உங்கள் அனைவர் திருமுன்பும் என் வணக்கம் உரியது. புலவர்களே! குலேச பாண்டியன் அயல்நாடு சென்றிருந் தானே; திரும்பியாயிற்றே?

பெருங்: ஆம்; புலவரே! அரசன் நேற்றுத்தான் திரும்பினன்!

இடை: மன்னனை நான் காணவேண்டும்; புதுவகைக் கவி யொன்று புனைந்து வந்துள்ளேன்; குலேச பாண்டி யனும் ... ...

பெருங்: சிறந்த புலவன்!

கோல்: நாவன்மை உடைய நாவலன்!

கபி: குன்றாத தமிழ் வள்ளல் குலேசன்! வழுதியின் அரசு வையங்காவலுடன் வண்டமிழ்க்காவலும் கொண்டிருக் கிறது, புலவர் திலகமே!

இடை: மகிழ்ச்சி, நண்பர்களே, மகிழ்ச்சி! நானும் கேள்விப் பட்டிருக்கிறேன் நாடாளும் பாண்டியன் தமிழாளும் செந்தமிழ்க் காவலன், சிறந்த பாவலன் என்று! எனவே தான் பொருள் உணரும் புரவலனயிற்றே யென்று புது வகைப் பாமலரைக் கொற்றவன் கண்ணோட்டத்துக்குக் கொண்டுவந்திருக்கிறேன்!

கபி: அவை கூடும் நேரம் அணுகிவிட்டது! அரண்மனைக்குச் செல்வோம்?

இடை: ஆம்; செல்லலாம்! வருங்கள்!

(எல்லோரும் செல்லல்)

காட்சி 4

இடம் - அரசவை

உறுப்பினர் - உரியோரனைவரும், புலவர்களும்

குலேச பாண்டியன்: புலவர்களே! கவி என்றால் என் நெஞ்சு துடிக்கிறது; அந்தத் துடிப்புக்கோர் விளக்கம் தூய கவிதை தான்! தமிழ்க்கவி என்றால் நான் என்னை இழந்து விடுகிறேன், இந்த அரசு, அரண்மனை, அமைச்சர், அந்தப்புறம். வாழ்வு, வளமை எதுவுமே எனக்குத் தேவையில்லை; ஆம்; தெய்வத் தமிழ்தான் வேண்டும், அந்தத் தேவையைச் சேவையாகச் செய்துவரும் செந்தமிழ்ப் பாவலர்களே? சங்கத்துச் சான்றோர்களே! புதுப்புதுக் கவிவிருந்து வரிசையில் இன்று நீங்கள் கோணர்ந்திருக்கும் தமிழை நான் சுவைக்க எண்ணுகிறேன்.

கபி: (எழுந்து) அரசே! இவர் இடைக்காடர்; இனிய புலவர்!

பாண்: வணக்கம்!

இடை: வணக்கம். அரசே!

கபி: நல்ல கவிவளத்தால் வல்ல தமிழ்த் தொண்டர்!

இடை: தென்னா! தென்பாண்டி மன்னா! உனது நாடு உவகை வீடு! செந்தமிழ்க் காடு! புலவர்களின் கூடு! கேள்விப் பட்டேன் உனது கீர்த்தியை; காடு, மலை, கடல்கடந்து உனது நாடு வந்தடைந்தேன்; சங்கப் புலவரது நடுவில் சிங்கமென வீற்றிருக்கும் நின் திருமுன் தமிழ்த்தாய் திருவீற்றிருக்கிறாள்! தமிழர் பல்கலைக் கழகமாகிய தமிழ்ச் சங்கம் உனது ஆதரவில் ஒளிர்கிறது. தெய்வச் சொக்கர் திருவருளால் சைவக்குடி வந்து விளங்கும் உன்மேல் ஓர் கவிமலர் சூட்டுகிறேன்:

புலவர்க்கோர் கலைமணியே!
போதியத்தின் நல்வேரே!
புறக்கிடாத
சிலவர்க்குத் தலைவனெனச்
சிறக்கின்ற நின்புகழைச்
சேறித்தல் வேண்டிப்

பலகற்ருர் பாவலர்கள் ;
பார்த்திலர் ஓர் சொல்லாற்
பகருதற்கே !
அலவுற்ருர் ; ஆதலிஞல்
அன்ருேஇந் நாட்டிடையே
அலேகின் ருரே !

வையைத் திருநதியும் வளமான தலேநகரும்
தெய்வத் திறனுமுயர் தென்தமிழின் பாவலர்கள்
உய்வைத் தருங்கவியும் ஒளிரும் நினதுபுவி
ஐயை அடியிணேகள் அடியேன்றன் சென்னியவே

கபி : ஆகா ! என்னே கவிநயம் ! என்னே கவிநயம் !

பெருந் : அழகான பாடல் ! அழகான கருத்து !

பெருங் : கற்பனேச் சுரங்கம் ! கவிதை ஊற்று ! கவியென்ருல் இதுவன்ருே கவி!

[பாண்டியன் வாளா இருக்கிருன் ; அவை அமைதியாக இருக்கிறது]

(பாண்டியன் மனத்துள்) குரல் : அழகாகப் பாடிவிட்டானே ! இந்தப் புலவன் இவ்வளவு இவனே நான் பரிசு தந்து பெருமைப் படுத்தலாகாது ! என்னேவிட உயர்ந்த பாவலன் இன்ஞெருவஞ ? முடியாது ! முடியாது !

கபி : (மெதுவாக) என்ன கிழாரே ! மன்னன் மௌனம் !

பெருந் : அரசன் சிறிதும் தலேகூட அசைக்கவில்லேயே ?

கோல் : வாய்திறந்து பாராட்டவும் இல்லேயே !

இடை : (சுற்றுமுற்றும் பார்த்து) அவமானம் ! அவமானம் ! அன்னேத் தமிழின் அருமை தெரிவானேன்று அவைதேடி நாடு கடந்து ஓடிவந்த எனக்கு அவமானம் போயிற்று என் மானம் !

[ஓடுதல் ; புலவர்கள் விழித்தல்; மன்னன் அலட்சியபாவம்]

(தொடரும்)

செய்திகள்

தருமபுர ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

மகா கயிலாய யாத்திரை நிறைவு

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கயிலாய யாத்திரையை வெற்றியோடு முடித்துக்கொண்டு 25—8—59 செவ்வாய்க்கிழமை காசிக்கு எழுந்தருளினார்கள். காசிமடத்தில் வரவேற்புக்கள் அளிக்கப்பெற்றன. 2—9—59 புதன்கிழமை சென்னைக்கு எழுந்தருளினார்கள். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் சென்னை உயர்மன்ற நீதிபதி கனம் திரு. என். சோமசுந்தரம் அவர்களும் நீதிபதி திரு. சுப்பிரமணிய நாடார் அவர்களும், திரு. வி. இரத்தின முதலியார், திரு. என். முருகேச முதலியார், திரு. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. கி. வா. ஜகநாதன், திரு. என். சங்கரன், திரு. புருஷோத்தம் எம். எல். ஸி. முதலிய பெருமக்கள் மாலை சூட்டி வரவேற்பு அளித்தனர். பெருமக்களின் அன்பு வெள்ளத்தில் திளைத்து மகாசந்நிதானம் அவர்கள் சென்னை சமயப் பிரசார நிலையத்துக்கு எழுந்தருளி கொலுக்காட்சி வழங்கியருளினார்கள். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்களைக் கொலுவிருத்தி வழிபாடுகள் செய்தார்கள். அன்பர்கள் பலரும் வந்திருந்து வழிபட்டனர். மகாசந்நிதானம் அவர்கள் கைலாயகிரிப் பிரசாதங்களும், காசி விசுவநாதர் பிரசாதங்களும் வழங்கி ஆசீர்வதித்தார்கள்.

காலை 10 மணிக்குச் சென்னையிலிருந்து தருமைக்கு எழுந்தருளினார்கள். வழிநெடுகிலும் வரவேற்புக்களும், மலர் மாலைகளும் மக்களின் அன்புக்காணிக்கைகளாகச்செலுத்தப்பெற்றன. சாலையோரங்களில் மக்கள் திரள் திரளாக நின்று குருமகா சந்நிதானம் அவர்களைத் தரிசனம் செய்தார்கள்.

சிதம்பரம் சபாநாயகர்கோயில் தீக்ஷிதர்கள், பெருமக்கள் கூடியிருந்து மாலை சூட்டி வரவேற்பளித்தனர். சீயாழி, வேளூர், மாயூரம் சேந்தங்குடியிலும், வள்ளலார்கோயில், மாயூரம் ஆகிய

இடங்களிலும் பெருமக்கள் பலர் சிறந்த வரவேற்பளித்தனர். முனிசிபல் உயர்பள்ளி, முனிசிபல் ஆபீஸ் ஆகிய இடங்களில் வரவேற்புக்கள் நிகழ்ந்தன.

தருமையில் ஆதீனத் திருமடம், அடியார்களும், தேவஸ்தானம் காரியாலய உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும், கல்லூரி முதலிய கல்வி நிலைய ஆசிரியர்களும் மாணவர்களும், ஞானசம்பந்தம் அச்சகத்தார்களும், பெருமக்களும் கூடியிருந்து வரவேற்க மாலை 5 மணிக்குத் தருமைக்கு எழுந்தருளியானூர்கள். ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி, ஸ்ரீ குருஞானசம்பந்தர், ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் கோயில்களுக்குச் சென்று வழிபாடாற்றி கொலுக்காட்சி வழங்கி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கி யருளினூர்கள்.

3–9–59 அன்று ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு ஏகதின லக்ஷார்ச்சனையும், ஸ்ரீ ஞானம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும், 4-9-59 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு ஏகதின லக்ஷார்ச்சனையும், அபிஷேக ஆராதனைகளும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளால் நிகழ்ந்தன. வழிபாட்டிற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் எழுந்தருளினூர்கள்.

திருக்கயிலைப் பிரார்த்தனை வழிபாடுகள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருக்கயிலாயமலைத் தரிசனத்திற்காகப் பரிவாரங்களுடன் எழுந்தருளிய யாத்திரையை இனிது நிறைவேற்றி நம்மனோர்க்கு அருள் வழங்கும் பொருட்டு தருமையாதீனத்திலும், தருமையாதீனத்தைச் சேர்ந்த திருக்கோயில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன.

மாயூரம் முதலிய இடங்களிலிருந்தும் பிரமுகர்களும் அன்பர்களும் வந்து வழிபட்டனர்.

ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு

24—8—59 திங்கட்கிழமை காலையில் ஸ்ரீ சொக்கநாதர் ஆலயத்தில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு ஓர் சிறப்பு வழிபாடு

நிகழ்த்தப்பெற்றது. அபிஷேக ஆராதனைகள் மிக்க சிறப்போடு நிகழ்ந்தன. ஸ்ரீ சோக்கநாதர் ஆலயத்தின் முன்மண்டபம் பூக்களால் ஒப்பனை செய்யப்பட்டிருந்தது. வழிபாட்டிற்கு ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களும் ஏற்பாடு செய்தனர். ஆதீனத்தைச் சேர்ந்த அலுவலர்கள் அனைவரும் வந்து வழிபட்டுப் பாராயணத்திலும் கலந்துகோண்டனர். ஆதீனம் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் வழிபாட்டில் கலந்துகோண்டு திருக்கயிலைப் பதிகம் பாராயணம் செய்தனர்.

ஸ்ரீ ஆனந்தபரவசர் வழிபாடு

20—8—59 அன்று வியாழக்கிழமை தருமையாதீனம் இரண்டாவது மகாசந்நிதானம் ஸ்ரீ ஆனந்தபரவசர் ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. தருமையைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் வந்து வழிபட்டுப் பிரார்த்தனை செய்தனர். திருக் கயிலைப் பதிகப் பாராயணமும் செய்யப்பெற்றது. குழந்தை களுக்கும் மற்றவர்களுக்கும் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன.

ஸ்ரீ ஞானபுரீசுவரர் வழிபாடு

20—8—59 அன்று வியாழக்கிழமை ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ ஞானம்பிகை, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி முதலிய மூர்த்திகளுக்கு அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனைகளும் செய்யப்பெற்றன. திருக்கயிலைப் பதிகப் பாராயணமும் பிரார்த்தனையும் நடை பெற்றன தருமையைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் வந்து வழிபட்டுப் பிரார்த்தனையில் கலந்துகோண்டனர்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கைக்கு ஏகதின லக்ஷார்ச்சனை

28—8—59 வெள்ளிக்கிழமை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம் பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், ஏகதின லக்ஷார்ச்சனையும் நிகழ்ந்தன. வழிபாடு தருமபுர ஆதீனம் கூட்டுறவுப் பண்டகசாலையின் சார்பில் நிகழ்ந்தது. மாயூரம் முதலிய இடங்களிலிருந்தும் அன்பர்கள் பலர் வந்து வழிபட் டுய்ந்தனர்.

ஆதீன தேவஸ்தானங்களில் சிறப்பு வழிபாடு

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சுவாமிக்குப் பஞ்சாமுகார்ச்சனையும், அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும், ஸ்ரீ சரபமூர்த்திக்கு ஏகதின லக்ஷார்ச்சனையும் சந்தனக்காப்பு அலங்காரமும் அபிஷேக ஆராதனைகளும் 16—8—59 ஞாயிறன்று நிகழ்ந்தன.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சுவாமிக்கு ஏகதின லக்ஷார்ச்சனையும் அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும் சந்தனக்காப்பு அலங்காரமும் அபிஷேக ஆராதனைகளும் 17—8—59 திங்கட்கிழமை நிகழ்ந்தன. ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளினார்கள்.

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் சுவாமி, அம்பாள், ஸ்ரீ தியாகராஜசுவாமி ஆகிய மூர்த்திகளுக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும். ஸ்ரீ அம்பாளுக்கு சந்தனக்காப்பு அலங்காரமும் அபிஷேக ஆராதனைகளும் 21-8-59 வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அமுதகடேசுவரசுவாமிக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும், சந்தனக்காப்பு அலங்காரமும், ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்கு சஹஸ்ரநாம அர்ச்சனையும் அபிஷேக ஆராதனைகளும் 14—8—59 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றன.

தேவஸ்தானத்தில் இராஜாங்கக் கட்டளையில் சுவாமி, அம்பாள், ஸ்ரீ தியாகராஜசுவாமி, ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி ஆகிய மூர்த்திகளுக்கு சஹஸ்ரநாம அருச்சனையும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு சந்தனக்காப்பு அலங்காரமும் 20—8—59 வியாழக்கிழமையன்று நிகழ்ந்தன.

ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் சுவாமி, அம்பாள், ஸ்ரீ சம்பந்தர் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சஹஸ்ரநாம அர்ச்சனையும், ஸ்ரீ அம்பாளுக்கு சந்தனக்காப்பு அலங்காரமும் சிறப்பாக 21—8—59 வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ விநாயகருக்கு சஹஸ்ரநாமார்ச்சனையும், சுவாமிக்குப் பஞ்ச முகார்ச்சனையும், ஸ்ரீ அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு ஷண்முகார்ச்சனையும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் 21—8—59 வெள்ளிக்கிழமை யன்று மிக்க சிறப்போடு நடைபெற்றன.

மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சுவாமி, அம்பாள், ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி ஆகிய மூர்த்திகளுக்கு ருத்ராபிஷேகமும், அஷ்டமூர்த்தி அர்ச்சனையும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் 13—8—59 வியாழக்கிழமை நடைபெற்றன.

திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சுவாமி, அம்பாள், ஸ்ரீ சம்ஹாரமூர்த்தி ஆகிய மூர்த்திகளுக்கு ருத்ராபிஷேகமும், விசேஷ அலங்காரமும், அர்ச்சனைகளும் 14–8–59 வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றன. விளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் சுவாமி தேவஸ்தானம், திருமுல்லை வாசல் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி தேவஸ்தானம், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம், கருங்குயில் நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவர சுவாமி தேவஸ்தானம், பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானம், குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானம் ஆகிய தேவஸ்தானங் களில் சுவாமி, அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அர்ச்சனையும் நடைபெற்றன.

மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ் தானத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சஹஸ்ரநாம அர்ச்சனையும், சந்தனக்காப்பு அலங்காரமும் சிறப்பாக நடைபெற்றன.

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் திருக்கயிலைப் பிரார்த்தனைக் கூட்டம்

செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் திருக் கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25 ஆவது குருமகா

சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பூரண நலத்துடன் திருக்கயிலாய தரிசன யாத்திரையைப் பூர்த்தி செய்துகொண்டு ஸ்ரீ காசிக்கு எழுந்தருளிய முன்னிட்டு, (28-8-59) வெள்ளிக்கிழமை மாலை 6½ மணிக்கு நிலைய மன்றத்தில் திருக்கயிலைப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் சென்னை மாநில சர்வீஸ் கமிஷன் தலைவர் திரு. V. இரத்தின முதலியார் B. A., B. L. அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். திரு. அ. இராமநாதம் பிள்ளை, M. A. L. T. அவர்களும், திரு. கீ. இராமலிங்க முதலியார், M. A. அவர்களும், திரு. கீ. இராமலிங்க முதலியார், M. A. அவர்களும் திரு. கி. வா. ஜகந்நாதன், M. A. அவர்களும், திரு ச. சிவகுமாரன் M. A. அவர்களும், திரு. K. பாலசுப்பிரமணிய அய்யர் B. A. B. L., M.L.C அவர்களும், திரு. T. புருஷோத்தம், M.L.C அவர்கள் முதலியோர்களும் திருக்கயிலை பற்றிய விரிவுரை நிகழ்த்தினார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியரும், மாணவ மாணவியர்களும் திருக்கயிலைத் தேவார பாராயணம் நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திர விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நக்ஷத்திரத்தில் மாதந்தோறும் சிவதலங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் திருப்பதிகங்களை அச்சிட்டு வழங்கி வருதல் போல இம்மாதம் 5—9—59 சனிக்கிழமை திருஇடையாறு ஸ்ரீ இடையாற்றுநாத சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விகாரிஸூ புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய)
(17—9—59 முதல் 17—10—59 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி 1, 2 பாதங்கள் சுபமாகும். தனப்பெருக்கு ஏற்படும். 3, 4 பாதங்கள் வீண் அலைச்சல்களையும், தொழில் நஷ்டங்களையும் உண்டுபண்ணும் பரணி முதல் பாதம் குடும்ப சுகத்தை தரும். இல்லறம் ஓங்கும். ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும். பரணி 2, 3, 4 பாதங்கள் வியாதியையும், கடனையும் அபவாதங்களையும் உண்டுபண்ணும். அபஜயம் ஏற்படும். கார்த்திகை முதல் பாதம் இடம் மாறி தொழில் விருத்தி ஏற்படும். குடும்ப கலவரம் உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் வீண் அபவாதங்களும், சில்லரையான நஷ்டங்களும், அபஜயமும் உண்டுபண்ணும், ரோகிணி நான்கு பாதங்களும் மிசிரமாய் நடக்கும். வரவு செலவு சமமாகும். சுக துக்கம் சமமாகும். மிருகசீர்ஷம் 1, 2 பாதங்கள் வித்யாபிவிருத்தியும், வியவகார வெற்றியையும், கீர்த்தி பத்திரம் கிடைத்தலும் தரும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள் தேசாந்தர பிரயாணத்தையும் அநேகவிதமான காரிய சாதனங்களையும் தரும். திருவாதிரை நான்கு பாதங்களும் ஆரோக்கியத்தை உண்டுபண்ணும். தொழில் ஓங்கும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் கீர்த்தியைத் தரும். தெய்வபலம் பிரகாசிக்கும். சத்துரு நாசமாகும். சுப சந்தோஷங்களை உண்டுபண்ணும். விஜயம் ஏற்படும். புதன், சனி சுபமாகும்.

4: கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4ம் பாதமும், பூசம் நான்கு பாதங்களும் அசாத்தியமெல்லாம் சாதித்துத் தரும். உலகப் பிரசித்தியை உண்டுபண்ணும். ஆரோக்கியமுண்டாகும். இல்லறம் ஓங்கும். ஆயில்யம் நான்கு பாதங்களும் லாபத்தைத் தரும். நஷ்டமான பொருள் வந்துசேரும். விரோதிகள் சரண் அடைவார்கள். தொழில் ஓங்கி சுப சந்தோஷமுண்டுபண்ணும். வெள்ளி, சனி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக மேன்மையை உண்டுபண்ணும். மேலோர், பெரியோர் அன்பினால் அசாத்திய மெல்லாம் சுலபமாக முடித்துக்கொடுக்கும். கீர்த்தி ஏற்படச் செய்யும். பூரம் நான்கு பாதங்களும் தான தர்மாதி புண்ணிய பலன்களையும் தேசாடனத்தையும் தரும். உத்திரம் முதல்பாதம் வீண் அலைச்சலையும் குடும்ப கவலைகளையும் வியாதி பயத்தையும் உண்டுபண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம் - சித்திரை ½

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் உத்யோக பிரமோஷனைத் தரும். இடம் மாறும். மேலோர் அன்பு உண்டாகும். ஆரோக்கியமும் சுகவாசமும் உண்டுபண்ணும், ஹஸ்தம் முதல் பாதம் விசேஷ லாபத்தைத் தரும் ஸ்தாவர ஜங்கம கிரய விக்ரயங்கள் உண்டுபண்ணும். புத்திராதிகளால் கவலைகாட்டும் ஹஸ்தம் 2, 3, 4 பாதங்கள் தெய்வபலத்தோடு பிரகாசம் தரும். சதா தெய்வ சிந்தனையும், சகல ஜனங்களாலும் கௌரவிக்கும் தன்மைகளையும் ஆரோக்கியத்தையும் தரும். நினைத்ததெல்லாம் கைகூடச் செய்யும் இல்லற சுகபோகங்களும். தொழில் ஏற்றமும் ஏற்படச் செய்யும். சித்திரை 1, 2 பாதங்கள் குடும்ப சுகத்தை உண்டுபண்ணும். கடன் நீங்கி சந்தோஷமுண்டாகும். சுபாதிகள் ஏற்படும். கவலை நீங்கி சுபமுண்டாகும், சனி, செவ்வாய் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராது. விரயம் அதிகமாகும். சுவாதி நான்கு பாதங்களும் மகோன்னத பதவிகளைத்தந்து உலகப் பிரசித்தியை உண்டுபண்ணும். நூதன சுகவாச போகங்களையும் கிரக லாபங்களையும் தரும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் தொழில் ஏற்படும். வியாபார விருத்தி, குடும்ப சுகம் நஷ்டமான பொருள் வரத்து, கடன் நிவாரணம் முதலிய நன்மைகளைத் தந்து சந்தோஷம் உண்டுபண்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதம் தூரப் பிரயாணத்தைத் தரும். நஷ்டமுண்டுபண்ணும். அனுஷம் 4ம் பாதமும் கேட்டை நான்கு பாதங்களும், தூரதேச வாசத்தையும், சதா கவலைகளையும் அதிகச் செலவுகளால் குடும்ப சிரமத்தையும் பெரியோர்கள் வருத்தங்களையும் உண்டுபண்ணும். திங்கள், புதன் சுபமாகும்..

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் கவலையோடு இல்லறம் நடக்கும். சாந்தமிராது. குரோத புத்தியும், பெரியோர்கள் வருத்தமும் உண்டாகும், பூராடம் நான்கு பாதங்களும் உத்திராடம் முதல் பாதமும் சுகபோக சௌக்கியங்களையும் புத்திராதிகளால் மேன்மையையும் தரும். வெகுநாளாக எதிர்பார்த்து நடவாத காரியங்கள் எல்லாம் கைகூடும். லாபம் தரும். சந்தோஷ முண்டாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் வீண் அலைச்சல்களையும் நஷ்டத்தையும் உண்டுபண்ணும். திருவோணம் 1, 2, 3 பாதங்கள் சுபமிராது. இயற்கைக்கு மாருக நடக்கும். திருவோணம்

மூன்றும் பாதம் மிசிரமாய் நடக்கும். சுயமான அறிவு காலத்தில் உபயோகப்படாமல் தடுத்துவிடும். நல்லோர் பெரியோர்களுடைய அன்பு குறைந்துகாட்டும். ஆனாலும் குடும்பத் தலைவர்கள் பலத்தால் எல்லாம் நன்மையாகும். அவிட்டம் 1, 2 பாதங்கள் பெரிய பதவிகளைத்தரும். ஆனால் குடும்ப கஷ்டங்களையும் பெரியதாக்கித்தரும். செவ்வாய், வியாழன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதம் சுபமாகும். அதிகஉழைப்பு ஏற்படும். குடும்பம் ஓங்கும். சதயம் நாலு பாதங்களும் சுபமிராது. மேல் பதவிகளிலிருந்து இறக்கத்தைத் தரும். பூரட்டாதி 1, 2 3 பாதங்களும், தன தான்ய பெருக்கத்தையும் இல்லற சுக போகங்களையும் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4ம் பாதம் அலைச்சல் அபவாதம் அகங்காரம் இவைகள் விருத்தியாகும், உத்திரட்டாதி நான்கு பாதங்களும் உயர்பதவிகளைத்தரும். தனதான்ய பெருக்கு ஏற்படும். ரேவதி நான்கு பாதங்களும் சாந்தமாகும். தொழில் ஓங்கும். உழைப்பு அதிகமாகும். பெரியோர் மேலோர் அன்பு கிட்டும். தெய்வ பலம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- ஷை புரட்டாசி மாதம் ஈதிபாதைகள் உலகில் அதிகமாகும். அமைதி குறையும். விலைவாசிகள் சற்று குறைந்துவரும். சுபிட்சம்போல் இருக்கும். எங்கும் நிறைந்த சர்வேசுவரர் எல்லோருடைய மனதிலும் வசித்து ஸத்புத்திரர்களைத் தந்து பிராசீன சிஷ்டாசாரங்களைக் கெடுக்காமல் இருந்து கொண்டு ஆஸ்தீக புத்தியாய் நிறைந்த பக்தியுடன் அவரவர்கள் குலாசாரத்துக்குத் தக்கபடி கடவுளை வழிபட்டுக்கொண்டிருக்க அருள் புரிவாராக. இனி மகாஜனங்களின் ஸத்குணத்தால்தான் உலகம் சுபிக்ஷமடையவேண்டும். கடவுள் துணை.

சுபம்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார
நிலையத்தின் சார்பில் மாதாந்தர சமயப் பிரசாரக் கூட்டம்



திரு அச்சிறுபாக்கம் இராஜகோபுரம்

திரு அச்சிறுபாக்கத்தில் தலவிருக்ஷமாகிய கோன்றை மரத்தின் பக்கத்தில்

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலைய
மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டத்தினர்

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்
திருக்கயிலைப் பிரார்த்தனைக் கூட்டம்



கீழ் :- திருப்புகழ்மணி அவர்களும், நிலையத் திருமுறை வகுப்பு மாணவியர்களும் கயிலைப் பிரார்த்தனை நிகழ்த்துகின்றனர்.

மேல் :- திரு க. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் விரிவுரைகள் நிகழ்கின்றன.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையம்
மாதாந்தர சமயப் பிரசாரக் கூட்டம்

பெரும்பேறு கண்டிகை மலைமீதுள்ள
திருமுருகன் கோயிலில் பிரசாரக் கூட்டத்தினர்
வழிபாடு நிகழ்த்தித் திரும்புகின்றனர்.



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருக்கயிலையின் வடக்குமுக தரிசனம் – இளங்காலை